ஆதியாகமம் ........................................4
யாத்திராகமம் .................................... 55
லேவியராகமம் ............................... 100
எண்ணாகமம் .................................. 129
உபாகமம் ...................................... 171
யோசுவா ....................................... 210
நியாயாதிபதிகள் ............................. 235
ரூத் .............................................. 261
1 சாமுவேல் ................................... 266
2 சாமுவேல் ................................... 301
1 இராஜாக்கள் ................................. 330
2 இராஜாக்கள் ................................. 363
2 நாளாகமம் ................................... 394
2 நாளாகமம் ................................... 425
எஸ்றா ........................................... 460
நெகேமியா .................................... 471
எஸ்தர் .......................................... 486
யோபு ............................................ 495
சங்கீதங்கள் ................................... 540
நீதிமொழிகள் .................................. 651
பிரசங்கி ......................................... 690
உன்னதப்பாட்டு ............................... 699
ஏசாயா .......................................... 708
எரேமியா ....................................... 756
புலம்பல்கள் ................................... 810
எசேக்கியேல் ................................... 818
தானியேல் ...................................... 868
ஓசியா .......................................... 884
யோவேல் ....................................... 893
ஆமோஸ் ....................................... 897
ஒபதியா ........................................ 904
யோனா ......................................... 906
மீகா ............................................. 909
நாகூம் ............................................ 914
ஆபகூக் ........................................... 917
செப்பனியா ..................................... 921
ஆகாய் ............................................ 924
சகரியா ........................................... 927
மல்கியா ......................................... 936
மத்தேயு ......................................... 940
மாற்கு ............................................ 977
லூக்கா ......................................... 1001
யோவான் ...................................... 1041
அப்போஸ்தலருடைய நடபடிகள். 1070
ரோமர் .......................................... 1106
1 கொரிந்தியர் ............................... 1122
2 கொரிந்தியர் ............................... 1137
கலாத்தியர் .................................... 1148
எபேசியர் ...................................... 1154
பிலிப்பியர் .................................... 1160
கொலோசெயர் ................................ 1165
1 தெசலோனிக்கேயர் ...................... 1170
2 தெசலோனிக்கேயர் ...................... 1174
1 தீமோத்தேயு ............................... 1177
2 தீமோத்தேயு ............................... 1182
தீத்து ........................................... 1186
பிலேமோன் ................................... 1189
எபிரெயர் ...................................... 1191
யாக்கோபு ..................................... 1202
1 பேதுரு ...................................... 1207
2 பேதுரு ...................................... 1213
1 யோவான் .................................... 1216
2 யோவான் .................................... 1221
3 யோவான் .................................... 1223
யூதா ............................................ 1225
வெளிப்படுத்தின விசேஷம் .......... 1227

# ஆதியாகமம்

### ஆசிரியர்

இந்த புத்தகத்தின் ஆசிரியரும் பஞ்சாகமத்தின் மற்ற நான்கு புத்தகங்களும் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியான மோசேயினால் எழுதப்பட்டது என்று யூத பாரம்பரியம் சொல்லுகிறது. இவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து மீட்டவன். எகிப்தின் அரண்மனையில் கற்பிக்கப்பட்டவன், அப்போஸ்தலர் 7:22. யெகோவா தேவனுடன் நெருங்கிய தொடர்புகொண்டவன். இயேசுவும், இயேசுவின் காலத்தில், இருந்த பரிசேயர்களும் சதுசேயர்களும் பஞ்சாகமத்தின் ஆசிரியர் மோசே தான் என்று உறுதிப்படுத்தினார்கள். யோவான் 5:45-47, மத்தேயு 19:7, 22:24.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு. 1446 க்கும் 1405 க்கும். இடையில் எழுதப்பட்டது.
இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலை பகுதியில் பாளையம் இறங்கி இருந்த நாட்களில் எழுதப்பட்டு இருக்கலாம்.

### யாருக்காக எழுதப்பட்டது

எகிப்திலிருந்து வெளி வந்து பாலைவனத்தில் இருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு.

### எழுதப்பட்ட நோக்கம்

இஸ்ரவேல் தேசத்தின் குடும்ப வரலாறுகளை விவரித்துள்ளான் எகிப்தின் அடிமைத்தனத்தில் இஸ்ரவேல் தேசம் உருவான விதத்தையும், கானான் தேசம், வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசம் தான் என்றும், இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தில் உண்டான உபத்திரவங்கள் தற்செயலாய் ஏற்பட்டது அல்ல, அவைகள் தேவனால் முன்பே திட்டமிட்டவைகள் என்றும், உலகங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவர்தான் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபின் தேவன் என்று விவரித்து எழுதியிருக்கிறான். யாத்திராகமம் 1:8, ஆதி 17:8, 15:13-16; 50:20, யாத்திராகமம் 3:15-16. இஸ்ரவேலின் தேவன் மற்ற ஜனங்களின் தெய்வங்களைப்போல் அல்ல அவர் உன்னதமானவர் என்பதை அறியவேண்டும் என்று எழுதினான்.

### மையக் கருத்து

ஆரம்பங்கள்.

பொருளடக்கம்

1. சிருஷ்டிப்பு — 1:1-2:25
2. மனிதனின் பாவம் — 3:1-24.
3. ஆதாமின் வம்சவரலாறு — 4:1-6:8.
4. நோவாவின் வம்சவரலாறு — 6:9-11:32.
5. ஆபிரகாமின் வரலாறு — 12:1-25:18.
6. ஈசாக்கும் அவனுடைய குமாரர்களின் வரலாறும் — 25:19-36:43.
7. யோசேப்பின் வம்சவரலாறு — 37:1-50:26.

## அத்தியாயம் 1

### சிருஷ்டிப்பின் வரலாறு

1 ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார். 2 பூமியானது. ஒழுங்கற்றதாகவும் வெறுமையாகவும்
இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் தண்ணீரின்மேல் அசைவாடிக் [†]கொண்டிருந்தார்.
3 தேவன் “வெளிச்சம் உண்டாகட்டும்,” என்றார், வெளிச்சம் உண்டானது. 4 வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்;
வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். 5 தேவன் வெளிச்சத்திற்குப் பகல் என்றும், இருளுக்-
கு இரவு என்றும் பெயரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் முடிந்தது. [††]6 பின்பு தேவன்; “தண்-

† *உலாவி கொண்டிருந்தார்* †† *யூதர்கள் முறைப்படி ஒரு நாள், மாலையில் தொடங்கி மறு நாள் மாலையில் முடிகிறது.*

# யாத்திராகமம்

### ஆசிரியர்

இந்த புத்தகமும் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியான மோசேயினால் எழுதப்பட்டது என்று யூத பாரம்பரியம் சொல்லுகிறது. சந்தேகப்படாமல் மோசே தான் இதின் தெய்வீகமாக வழி நடத்தப்பட்ட ஆசிரியர் என்று இரண்டு காரியங்களால் ஏற்றுக்கொள்ளலாம். யாத்திராகமமே மோசே எழுதின காரியங்களை குறிப்பிடுகிறது. பின்னும் யெகோவா மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது; என்று யாத் 34:27 ல் சொல்கிறது யாத். 24:4 ல் சொல்கிறது மோசே யெகோவாவுடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து; ஆகையால் இந்த புத்தகத்தை மோசே தான் எழுதினார் என்பது நியாயமாக இருக்கிறது. இரண்டாவதாக, மோசே தாமே இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்குப்பெற்றவன் பார்வோனுடைய குடும்பத்தில் வளர்க்கப்பட்டு கல்வி கற்றவன். ஆகையால் எழுதுவதிலும் ஞானம் பெற்றவனாய் இருந்தான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு. 1,446 க்கும் 1,405 க்கும். இடையில் எழுதப்பட்டது.
இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய அவிசுவாசத்தினால் 40 வருடங்கள் வனாந்திரத்தில் வீணாக சுற்றி அலைக்கழிக்கப்பட்டார்கள். இந்த நாட்களில் தான் இந்த புத்தகம் அதிகமாக எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

எகிப்திலிருந்து மீட்கப்பட்ட ஜனங்களுக்காகவே இது எழுதப்பட்டது. எகிப்திலிருந்து வெளியே வந்த சீனாய் ஜனங்களுக்காக மோசே எழிதினான். (யாத் 17:14; 24:4; 34:27-28).

### எழுதப்பட்ட நோக்கம்

இஸ்ரவேலர்கள் எப்படி யெகோவாவின் ஜனங்களாக மாறினார்கள் என்பதையும். தேவனுடைய ஜனங்களாக உடன்படிக்கையின்படி எப்படி வாழவேண்டும் என்பதையும் விவரித்துக் காட்டுகிறது இஸ்ரவேல் ஜனங்களுடன் உடன்படிக்கை செய்த தேவன் உண்மையுள்ளவர், பரிசுத்தமானவர், சகல வல்லமையுள்ளவர். ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்ததை ஆபிரகாமின் சந்ததியாரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தபோது தேவனின் குணங்களை தேவனின் பெயர் மூலமாகவும் அவருடைய வல்லமையான செயல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தபடுவதை காண்கிறோம். ஒரு தனிக் குடும்பம் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, தேசமாக உருவாகுவதை இந்த புத்தகம் சொல்கிறது. யாத். 2:24; 6:5; 12:37.

### மையக் கருத்து

விடுதலை

பொருளடக்கம்

1. முன்னுரை — 1:1-2:25
2. எகிப்தின் அடிமைதனத்திலிருந்து இஸ்ரவேலின் மீட்பு — 3:1-18:27
3. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை — 19:1-24:18
4. தேவனுடைய இராஜரீக கூடாரம் — 25:1-31:18
5. கலகத்தினால் தேவனின் சமூகத்தை இழத்தல் — 32:1-34:35
6. தேவனுடைய இராஜரீக கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டது — 35:1-40:38

### அத்தியாயம் 1

### இஸ்ரவேலர்கள் எகிப்தில் துன்புறுத்தப்படுதல்

1 எகிப்திற்குப் போன இஸ்ரவேலுடைய மகன்களின் பெயர்கள்: ரூபன், சிமியோன், லேவி, யூதா, 2 இசக்கார், செபு-
லோன், பென்யமீன், 3 தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவைகளே. 4 இவர்கள் யாக்கோபுடன் தங்கள் தங்கள் கு-
டும்பங்களோடு போனார்கள். 5 யோசேப்போ அதற்கு முன்பே எகிப்திற்கு போயிருந்தான். யாக்கோபின் சந்ததியார்கள்

# லேவியராகமம்

ஆசிரியர்

இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்ட வசனங்கள் மூலமாக மோசே தான் இதை எழிதினான் என்று உறுதிப்படுத்திக் கொள்ளுகிறோம். அதிகாரம் 1:1, 2 வசனங்கள் இவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்படி யெகோவா சீனாய் மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் ஆகும் என்று சொல்கிறது. (27:34, ஒப்பிடுக 7:38; 25:1; 26:46) இந்த புத்தகத்தில் அனேக பிரமாணங்களுக்கு சம்பந்தப்பட்ட சரித்திரக் காரியங்கள் விவரிக்கப்பட்டுள்ளது. (8:10; 24:10-23) லேவியராகமம் என்ற பதம் லேவி கோத்திரத்திலிருந்து வருகிறது. லேவியர்கள் ஆசாரிய ஊழியத்திற்கும் ஆராதனை செய்திடவும் வேறு பிரிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். ஜனங்கள் எப்படி பரிசுத்த வாழ்க்கை வாழவேண்டும் என்றும், லேவியர்கள் மக்களுக்கு ஆராதனையில் எப்படி வழி நடத்த உதவ வேண்டும் என்றும் அதிகமாக சொல்லப்பட்டு இருக்கிறது.

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு. 1,446 க்கும் 1,405 க்கும் இடையில் எழுதப்பட்டது.
இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலைப் பகுதியில் பாளையம் இறங்கி இருந்த நாட்களில் எழுதப்பட்டது.

யாருக்காக எழுதப்பட்டது

இந்த புத்தகம் ஆசாரியர்களுக்கும், லேவேயர்களுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் அவர்களுடைய பின்வரும் சந்ததிக்கும் எழுதப்பட்டது.

எழுதப்பட்ட நோக்கம்

லேவியராகமம் புத்தகம், தேவன் மோசேயை ஆசரிப்பு கூடாரத்திலிருந்து அழைத்தது முதல் தொடங்குகிறது. மீட்கப்பட்ட ஜனங்கள், தங்கள் மத்தயில் வாசம் செய்யும் மகிமையான தேவனோடு எப்படி ஐக்கியம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த புத்தகம் விளக்குகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தையும் அவர்களுடைய கலாச்சாரத்தையும் மத வழிபாடுகளையும் விட்டு வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் இருக்கிற கலாச்சாரத்தையும் மத வழிபாடுகளையும் பின்பற்றாமல் யெகோவா தேவனுக்கு உண்மையாய் வாழும்படி போதிக்கிறது. இப்படிப்பட்ட கலாச்சாரத்திலிருந்து யெகோவாவுக்கா பிரித்தெடுத்த வாழ்க்கையை உண்மையாய் வாழ இந்த புத்தகம் நிபந்தனைகளை கொடுக்கிறது.

மையக் கருத்து

உபதேசம்

பொருளடக்கம்

1. பலிகளைக்குறித்த விதிமுறைகள் — 1:1-7:38
2. தேவனுடைய ஆசாரியர்களுக்கு கொடுக்கபட்ட விதிமுறைகள் — 8:1-10:20
3. தேவனுடைய ஜனங்களுக்கு அளிக்கப்பட விதிமுறைகள் — 11:1-15:33
4. பலிபீடத்திற்க்கான விதிமுறைகளும் பாவநிவிர்த்தியின் நாளுக்கான விதிமுறைகளும் — 16:1-34
5. நடைமுறை பரிசுத்ததிற்கான விதிமுறைகள் — 17:1-22:33
6. ஓய்வு நாட்களுக்கான, பண்டிகைக்களுக்கான விதிமுறைகள் — 23:1-25:55
7. தேவனுடைய ஆசிர்வாதங்களை பெற்றுக்கொள்ள கடைப்பிடிக்கவேண்டிய நிபந்தனைகள் — 26:1-27:34

### அத்தியாயம் 1

### தகனபலி

1 யெகோவா ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து மோசேயை அழைத்து அவனை நோக்கி: [2] “நீ இஸ்ரவேல் மக்களிடத்தில்
சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் யெகோவாவுக்குப் பலிசெலுத்த வந்தால், மாட்டுமந்-
தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து பலிசெலுத்தவேண்டும். [3] அவன் செலுத்துவது மாட்டு-
மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக; யெ-

# எண்ணாகமம்

ஆசிரியர்

இந்த புத்தகத்தின் ஆசிரியரும் பஞ்சாகமத்தின் மற்ற நான்கு புத்தகங்களும் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியான மோசேயினால் எழுதப்பட்டது என்று யூத பாரம்பரியம் சொல்லுகிறது. இந்த புத்தகத்தில், ஜனத்தொகைக் குறித்தும், கோத்திரங்களைக் குறித்தும், ஆசாரியர்கள் வம்சங்களைக் குறித்தும் மற்றும் பல இடங்களைக் குறித்தும் கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. எகிப்து தேசத்தை விட்டு வெளியே வந்த இரண்டாம் வருடத்திலிருந்து 40 வது வருடம் வரை சீனாய் மலை பக்கமாகவே ஏறக்குறைய 38 வருடமாக இஸ்ரவேலர்கள் பாளையும் இறங்கியிருந்த காலங்களில் நடந்த சம்பவங்களை இந்த புத்தகம் விவரிக்கிறது. 38 வருட காரியங்களை குறித்து அதிகம் சொல்லாமல் 2 ஆம் வருடத்திலும் 40 ஆம் வருடத்திலும் நடந்த சம்பவங்களைக் குறித்தும் அதிகமாக விவரிக்கிறது.

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு. 1446 க்கும் 1405 க்கும். இடையில் எழுதப்பட்டது.
இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய 2 ஆம் வருடத்தில் தொடங்கின சம்பவங்கள் 1:1 வசனத்தில் தொடங்குகிறது.

யாருக்காக எழுதப்பட்டது

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க செய்யப்பட்ட பிரயாணங்களின் ஆவணங்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இந்த புத்தகத்தில் எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்தை நோக்கி பிரயாணம் செய்கிற நமக்கும் நம்முடைய தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்துகிறது.

எழுதப்பட்ட நோக்கம்

கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருந்த, இஸ்ரவேலின் இரண்டாம் சந்ததியார்கள் விசுவாசத்தோடு தேவன் வாக்குதத்தம் செய்த தேசத்தை சுதந்திரித்துக் கொள்ள இந்த எண்ணாகமம் மோசேயினால் எழுதப்பட்டது. (எண்ணாகமம். 33: 2). தேவன் தன் தேச ஜனங்களுக்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது. முதல் சத்தியார் தேவனுடைய உடன்படிக்கைக்கு உண்மை இல்லாதவர்களாய் போனாலும் தேவன் தம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவராயிருக்கிறார். ஜனங்கள் முரட்டாட்டம் செய்து வணங்காக் கழுத்துள்ளவர்களாய் இருந்தாலும் இந்த இரண்டாம் சந்ததிக்கு தாம் வாக்கு செய்த தேசத்தை கொடுத்து ஆசிர்வதித்தார்.

மையக் கருத்து

பிரயாணங்கள்.

பொருளடக்கம்

1. வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க ஆயுத்தம் ஆகுதல் — 1:1-10:10.
2. சீனாயிலிருந்து காதேசுக்கு செய்த பிரயாணங்கள் — 10:11-12:16
3. மோசேக்கு விரோதமாக எழுந்ததால் உண்டான தாமதங்கள் — 13:1-20:13
4. காதேசிலிருந்து மோவாபின் சமவெளிக்கு செய்த பிரயாணங்கள் — 20:14-22:1
5. மோவாப் தேசத்தில் பிரவேசித்த இஸ்ரவேலர் கானான் தேசத்தை சுதந்தரிக்க எதிர்ப்பார்ப்போடு இருந்தார்கள் — 22:2-32:42
6. பின் சேர்க்கை, மற்றக் காரியங்களைக் குறித்த உபதேசங்கள் — 33:1-36:13

## அத்தியாயம் 1

### கணக்கெடுத்தல்

1 இஸ்ரவேல் மக்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருடம் இரண்டாம் மாதம் முதல் தேதியில்,
யெகோவா சீனாய் வனாந்திரத்தில் இருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயை நோக்கி: 2 “நீங்கள் இஸ்ரவே-
லர்களின் முழுச்சபையாக இருக்கிற அவர்கள் தகப்பன்மார்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள ஆண்களாகிய எல்லா

# உபாகமம்

### ஆசிரியர்

மோசே தான் இந்த புத்தகத்தின் ஆசிரியர். யோர்தான் நதியை கடக்கும் முன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே செய்த உபதேசங்களின் தொகுப்புகள் அதிகமாக பதியப்பட்டு இருக்கிறது. 1:2, மோசே இஸ்ரவேலர் எல்லோரையும் நோக்கிச் சொன்ன வசனங்களாவன. கடைசி அதிகாரம் அனேகமாக யோசுவாவினால் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. மோசே தான் இந்த புத்தகத்தின் ஆசிரியர் என்று புத்தகம் முழுவதிலும் நிறைய ஆதாரங்கள் காணப்படுகிறது. 1:2, 4, 31:24. மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும் யோர்தான் நதிக்கு இப்புறத்தில் இருக்கிற மோவாபின் தேசத்தில் இருந்ததை இந்த புத்தகம் காண்பிக்கிறது. 1:5. உபாகமம் என்ற பதத்தின் பொருள் இரண்டாவது நியாயபிரமாணம். தேவனுக்கும் அவருடைய ஜனங்களான இஸ்ரவேலர்களுக்கும் நடுவில் செய்யப்பட்ட உடன்படிக்கை பிரமாணங்களை மறுபடியும் இந்த புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு. 1,446 க்கும் 1,405 க்கும். இடையில் எழுதப்பட்டது.
இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவிருந்த 40 நாட்களில் எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

எகிப்து தேசத்தின் அடிமைத்தினத்திலிருந்து விடுதலையான இஸ்ரவேலர்கள், 40 வருடங்கள் அலைந்து திரிந்து இறந்தபின்பு, கானான் தேசத்தில் பிரவேசிக்க ஆயத்தமாக இருந்த இளைய சந்ததியான இஸ்ரவேலர்களுக்கும், மற்றும் வேத புத்தகத்தை வாசிப்பவர்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

இஸ்ரவேல் தேசத்திற்கு மோசே கொடுத்த வழியனுப்பும் செய்திகள். இஸ்ரவேல் வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க ஆயுத்தமாக இருந்தார்கள். எகிப்தை விட்டு நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் சுற்றி, இப்போது யோர்தான் நதியை கடந்து கானான் தேசத்தை சொந்தமாக்கும் நாட்களில் இருந்தார்கள். ஆனாலும் மோசே தேசத்தில் பிரவேசிக்காமல் மரணத்தில் பிரவேசிக்க இருந்த நாட்களில் பேசின செய்திகள் பிரவேசிக்க போகிற புதிய தேசத்தில், சுகமாயிருக்கும்படி தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிய அன்பாய் மோசேயினால் கேட்டுக் கொள்ளப்பட்ட வழியனுப்பும் செய்திகள். இந்த இஸ்ரவேலின் தேவன் யார் என்றும் இஸ்ரவேலர்களுக்கு என்ன செய்தார் என்றும் ஜனங்களுக்கு நினைப்பூட்டும் செய்திகளை அளித்தான். 6:4, 10-12; 20-23. அதுமாத்திரமில்லாமல் பின்வரும் சந்ததிக்கும் இந்த கட்டளைகளை கைக்கொள்ள கற்றுக் கொடுக்கும்படி மன்றாடுகிறான். 6:6-9.

### மையக் கருத்து

கீழ்படிதல்

பொருளடக்கம்

1. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து செய்த பிரயாணங்கள் — 1:1-3:29
2. தேவனுடன் இஸ்ரவேலுக்கு உள்ள உறவுகள் — 4:1-5:33
3. தேவனுக்கு விசுவாசமாய் இருப்பதின் அவசியம் — 6:1-11:32
4. தேவனிடத்தில் அன்புகூறுவதும் அவருடைய கட்டளைக்களுக்கு கீழ்படிவதும் — 12:1-26:19
5. ஆசிர்வாதங்களும் சாபங்களும் — 27:1-30:20
6. கடைசி செய்திகளும் மோசேயின் மரணமும் — 31:1-34:12

### அத்தியாயம் 1

### ஓரேபைவிட்டுப் புறப்படுவதற்கான கட்டளை

1 சேயீர் மலைவழியாக ஓரேபுக்குப் பதினொரு நாட்கள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயாவிலிருந்து,
2 சூப்புக்கு எதிராகவும், பாரான், தோப்பேல், லாபான், ஆஸரோத், திசாகாப் ஆகியவற்றிக்கு நடுவிலும் இருக்கிற

# யோசுவா

### ஆசிரியர்

இந்த புத்தகத்தில், இதின் ஆசிரியர் யார் என்று தெளிவாகக் குறிப்பிடவில்லை. நூனின் குமாரனாகிய யோசுவா, மோசேக்கு பிறகு இஸ்ரவேலின் தலைவனானான், இந்த புத்தகத்தின் அதிக பகுதிகளை எழிதினான். யோசுவாவின் மரணத்தின் பிறகு வேறொருவர் அவருடைய மரணத்தைக் குறித்து எழிதியிருக்கிறான். அனேகபகுதிகள் அவருடைய மரணத்துக்கு பிறகு சரி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. மோசேயின் மரணத்திலிருந்து கானான் தேசத்தை யோசுவாவின் தலைமையில் சொந்தமாக்கி கொண்ட சரித்திரங்கள் பதிவுசெய்யப்பட்டு இருக்கிறது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு 1,405 க்கும் 1,385 கி. மு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
கானான் தேசத்தை யோசுவா ஜெயித்ததினால், கானான் தேசத்தில் தான் எழுதபட்டிருக்கவேண்டும்.

### யாருக்காக எழுதப்பட்டது

இஸ்ரவேல் ஜனங்களுக்காகவும் வருங்காலத்தில் வேதத்தை வாசிப்பவர்களுக்காகவும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவன் வாக்கு பண்ணின பகுதிகளை எப்படி ஜெயிக்க வேண்டும் என்ற இராணுவ தந்திரங்களை, திட்டங்களை இந்த புத்தகம் அளிக்கிறது. எகிப்தை விட்டு வெளியே வந்தபிறகு, 40, வருடங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த பிறகு, முறுமுறுத்தவர்கள் மரித்த பிறகு, புதிய இஸ்ரவேல் சந்ததி எழும்பி கானான் தேசத்தை சுததந்திரித்துக்கொள்ள ஆயுத்தமாக இருந்தார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் உடன்படிக்கையின்படி வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் எப்படி ஸ்தபிக்கப்பட்டார்கள் என்று விளக்குகிறது. சீனாய் மலையில் இஸ்ரவேல் ஜனங்களுடன் செய்த உடன்படிக்கைக்கும் அவர்களுடைய முற்பிதாக்களுடன் செய்த வாக்குத்தத்திற்கும் யெகோவா தேவன் எவ்வளவு உண்மையுள்ளவர் என்பதை இந்த புத்தகம் உறுதிப்படுத்துகிறது. தேவ ஜனங்கள் உடன்படிக்கைக்கும் ஒற்றுமைக்கும், நல்நடக்கைக்கும் பாத்திரமாக வாழ. வேண்டும் என்று இந்த வேதவசனங்கள் போதிக்கிறது.

### மையக் கருத்து

ஜெயம்கொள்ளுதல்

பொருளடக்கம்

1 வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் பிரவேசம் — 1:1-5:12
2 தேசத்தை ஜெயித்தல் — 5:13-12:24
3 தேசத்தை பங்கிடுதல் — 13:1-21:45
4 கோத்திரங்களின் ஒற்றுமையும் யெகோவா தேவனிடத்தில் உண்மையாய் இருப்பதின் அவசியம் — 22:1-24:33

## அத்தியாயம் 1

### யோசுவாவிற்குக் யெகோவாவுடைய கட்டளை

1 யெகோவாவுடைய ஊழியக்காரனாகிய மோசே இறந்தபின்பு, யெகோவா மோசேயின் ஊழியக்காரனான நூனின்
மகனாகிய யோசுவாவைப் பார்த்து: 2 என் ஊழியக்காரனாகிய மோசே இறந்துபோனான்; “இப்பொழுது நீயும்
இந்த மக்கள் எல்லோரும் எழுந்து, இந்த யோர்தான் நதியைக் கடந்து, இஸ்ரவேல் மக்களுக்கு நான் கொடுக்கும் தேசத்-
திற்குப் போங்கள். 3 நான் மோசேக்குச் சொன்னபடி உங்களுடைய கால்கள் மிதிக்கும் எல்லா இடத்தையும் உங்களுக்-
குக் கொடுத்தேன். 4 வனாந்திரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐப்பிராத்து நதியான பெரிய நதிவரைக்கும் உள்ள
ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் மறைகிற திசையான மத்திய தரைக்கடல் வரைக்கும் உங்களுடைய எல்லை-
யாக இருக்கும். 5 நீ உயிரோடிருக்கும் நாட்களெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோ-
சேயோடு இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது-
மில்லை. 6 பெலன்கொண்டு திடமனதாக இரு; இந்த மக்களின் முற்பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று வாக்குக்-

# நியாயாதிபதிகள்

ஆசிரியர்

இந்த புத்தகத்தில் ஆசிரியரைப்பற்றி எதுவும் சரியாக குறிப்பிடவில்லை. ஆனாலும் சாமுவேல் தான் எழுதியிருக்க வேண்டும் என்று யூத பாரம்பரியம் சொல்கிறது. சாமுவேல் கடைசி நியாயதிபதியாக இருந்தான். மன்னர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் இந்த ஆசிரியர் வாழ்ந்திருக்கிறான். "அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன் தன் பார்வைக்கு சரிப்போனபடி செய்துவந்தான்" 17:6, 18:1, 19:1, 21:25. இந்த வரத்தைகள் அடிக்கடி எழுதப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நடந்த நாட்களுக்கும் எழுதின காலத்திற்கும் முரண்பாடாக இருக்கிறது. நியாயதிபதிகள் அர்த்தம் விடுவிக்கிறரவர்கள்/ மீட்பார்கள். இஸ்ரவேலர்கள் அந்நிய ராஜாக்களால் அடிமைப்படுத்தப்பட்டப்போது மீட்பர்கள் அவர்களை விடுவித்தார்கள். சிலர் மற்ற பிரச்சனைகளையும் தீர்த்து வைத்தார்கள்.

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 1,043 க்கும் 1,000 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது. தாவீது இராஜாவின் காலத்தில் இந்த புத்தகம் தொகுக்கப்பட்டதாக கருதப்படுகிறது. மனித நோக்கம் என்னவென்றால் யோசுவா மரித்தபின் மன்னர் ஆட்சியின் தேவையை உணரத்தக்கதாக எழுதப்பட்டது என்று கணிக்கப்படுகிறது.

யாருக்காக எழுதப்பட்டது

இஸ்ரவேலர்களுக்கும் வேதத்தை வாசிப்பவர்களுக்கும் எழுதப்பட்டது.

எழுதப்பட்ட நோக்கம்

கானான் தேசத்தை சொந்தமாக்கியப் பிறகு இஸ்ரவேலின் இராஜா வரை உள்ள சரித்திர குறிப்புகள். வெறும் சரித்திர பதிவுக்காக மாத்திரம் அல்ல தேவன் அவர்கள் மத்தியில் செய்த கிரியைகளை அறியவும் எழுதப்பட்டது (24:14-28; 2:6-13), இஸ்ரவேலர்கள் உடன்படிக்கையை மீறினப் பிறகும் யெகோவா, தான், ஆபிரகாமுக்கு செய்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராய் இருந்தார். ஒவ்வொரு சந்ததியிலும் தீமையோடு போராட தேவன் ஒருவரை எழுப்புவதால் இருந்தால் அனேக நியாயதிபதிகள் எழும்பியிருக்கவேண்டும்.

மையக் கருத்து

மோசமான நிலமைகளும் விடுதலைகளும்

பொருளடக்கம்

1. நியாயதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேலின் நிலைமை — 1:1-3:6
2. இஸ்ரவேலின் நியயாபதிகள் 3:7-16:31
3. இஸ்ரவேலின் பாவத்தின் காரியங்களைக் காட்டும் நிகழ்ச்சிகள் — 17:1-21:25

அத்தியாயம் 1

கானானியர்களோடு போரிடுதல்

1 யோசுவா இறந்தபின்பு இஸ்ரவேல் மக்கள் யெகோவாவை நோக்கி: கானானியர்களை எதிர்த்து யுத்தம்செய்யும்படி, எங்களில் யார் முதலில் எழுந்து புறப்படவேண்டும் என்று கேட்டார்கள். 2 அதற்குக் யெகோவா: யூதா எழுந்து
புறப்படட்டும்; இதோ, அந்த தேசத்தை அவனுடைய கையிலே ஒப்புக்கொடுத்தேன் என்றார். 3 அப்பொழுது யூதாவின்
மனிதர்கள் தங்களுடைய சகோதரர்களாகிய சிமியோனின் மனிதர்களை நோக்கி: நாம் கானானியர்களோடு யுத்தம்செய்ய நீங்கள் என்னுடைய சுதந்திரப் பங்குவீதத்தில் எங்களோடு எழுந்துவாருங்கள்; உங்களுடைய சுதந்திரப் பங்குவீதத்தில் நாங்களும் உங்களோடு வருவோம் என்றார்கள்; அப்படியே சிமியோன் கோத்திரத்தார்கள் அவர்களோடு
போனார்கள். 4 யூதா மனிதர்கள் எழுந்துபோனபோது, யெகோவா கானானியர்களையும், பெரிசியர்களையும் அவர்களுடைய கையிலே ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் பேசேக்கிலே 10,000 பேரை வெட்டினார்கள். 5 பேசேக்கிலே அதோ-
னிபேசேக்கைப் † பார்த்து, அவனோடு யுத்தம்செய்து, கானானியர்களையும், பெரிசியர்களையும் வெட்டினார்கள்.
6 அதோனிபேசேக் ஓடிப்போகும்போது, அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, அவனுடைய கை கால்களின் பெருவிரல்-

# 2 சாமுவேல்

### ஆசிரியர்

இந்த 2. சாமுவேல் புத்தகத்தில் ஆசிரியரைப்பற்றி எதுவும் சரியாக குறிப்பிடவில்லை. தீர்க்கத்தரிசி சாமுவேல் மரித்துவிட்டதால் இவர் எழுதியிருக்கமுடியாது. காத் நாத்தான் என்ற தீர்க்கதரிசிகள், ஆசாரியனான அபியத்தார் ஆகியவர்கள் எழுதியிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆதியிலே 1 சாமுவேலும். 2 சாமுவேலும் ஒரே புத்தகமாக இருந்தது. கிரேக்க மொழியில் மொழிப்பெயர்த்தவர்கள் இதை இரண்டாகப் பிரித்தார்கள். ஆகையால் 1 சாமுவேல் சவுல் இராஜாவின் மரணத்துடன் முடிகிறது. 2. சாமுவேல் தாவீதின் அரசாட்சியுடன் தொடங்குகிறது. முதலாவதாக தாவீது யூதா கோத்திரத்தின் மீது இராஜாவாக அபிஷேகிக்கப்பட்டான் பிறகு இஸ்ரவேல் முழுவதும் இராஜாவாக்கப்பட்டான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 1050 க்கும் 722 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
பாபிலோனியா சிறையிருப்புக் காலத்தில் வேதவல்லுனர்களால் தொகுக்கப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

தாவீது சாலோமோன் காலத்திலும் வாழ்ந்தவர்களுக்கும் பின்வரும் சந்ததிகளுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

இந்த புத்தகம் தாவீது இராஜாவின் ஆட்சியை பதிவு செய்கிறது. தாவீதின் உடன்படிக்கையை சரித்திரபூர்வமாக பதிவுசெய்கிறது. தாவீது எருசலேமை இஸ்ரவேலின் அரசியலின் மையமாகவும் ஆராதனைகளின் மையமாகவும் ஏற்படுத்தினான். (2 சாமு 5:6-12; 6:1-17). யெகோவாவின் வார்த்தைகளும் (2 சாமு: 7:4-16). (2 சாமு: 23:1-7). தாவீதின் வார்த்தைகளும் தேவன் கொடுத்த இராஜ்ஜியத்தின் முக்கியத்தை அழுத்தி சொல்கிறது. தீர்க்கதரிசனமாக மேசியாவின் ஆயிர வருட அரசாட்சியையும் சுட்டிக்காட்டுகிறது.

### மையக் கருத்து

ஒருங்கிணைத்தல்

பொருளடக்கம்

1. தாவீதின் இராஜ்ஜியத்தினுடைய ஏற்றம் — 1:1-10:19
2. தாவீதின் இராஜ்ஜியத்தினுடைய வீழ்ச்சி — 11:1-20:26
3. பிற்சேர்க்கை — 21:1-24:25

## அத்தியாயம் 1

### சவுலின் மரணத்தை தாவீது அறிதல்

1 சவுல் இறந்தபின்பு, தாவீது அமலேக்கியர்களை முறியடித்து, சிக்லாகு பட்டணத்துக்குத் திரும்பிவந்து, இரண்டு
நாட்கள் அங்கே இருந்த பின்பு, [2] மூன்றாம் நாளிலே ஒரு மனிதன் சவுலின் முகாமிலிருந்து புறப்பட்டு, தன்னு-
டைய ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, தன்னுடைய தலையின்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு, தாவீதிடம் வந்-
து, தரையிலே விழுந்து வணங்கினான். [3] தாவீது அவனைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டதற்கு,
அவன்: இஸ்ரவேலின் இராணுவ முகாமிலிருந்து தப்பிவந்தேன் என்றான். [4] தாவீது அவனைப் பார்த்து: நடந்த செய்தி
என்ன? சொல் என்று கேட்டதற்கு, அவன்: மக்கள் யுத்தத்தைவிட்டு ஓடிப்போனார்கள்; மக்களில் அநேகம் பேர் காயப்-
பட்டு இறந்துபோனார்கள்; சவுலும் அவருடைய மகனான யோனத்தானும் இறந்தார்கள் என்றான். [5] சவுலும் அவரு-
டைய மகனான யோனத்தானும் இறந்துபோனது உனக்கு எப்படித் தெரியும் என்று தாவீது தனக்கு அதை அறிவித்த வா-
லிபனிடம் கேட்டதற்கு, [6] அந்த வாலிபன்: நான் தற்செயலாகக் கில்போவா மலைக்குப் போனேன்; அப்பொழுது
இதோ, சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்துகிடந்தார்; இரதங்களும் குதிரை வீரர்களும் அவரைப் பின்தொடர்ந்து
நெருங்கினார்கள். [7] அவர் திரும்பிப் பார்த்து: என்னைக் கண்டு கூப்பிட்டார்; அதற்கு நான்: இதோ, இருக்கிறேன் என்-
றேன். [8] அப்பொழுது அவர்: நீ யார் என்று என்னைக் கேட்டார்; நான் அமலேக்கியன் என்று சொன்னேன். [9] அவர் என்-

# 2 இராஜாக்கள்

ஆசிரியர்

ஆதியிலே 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகங்கள் ஒரே புத்தகமாக இருந்தது. யூத பாரம்பரியம் எரேமியா தீர்க்கதரிசிதான் இதை எழுதியிருக்கிறான் என்று கருதுகிறது. ஆனால் தற்கால வேத வல்லுனர்கள் இதை அநேகர் சேர்ந்து குழுவாக எழுதியிருக்கலாம் என்கிறார்கள். உபாகமத்தின் நோக்கமான கர்த்தருக்கு கீழ்படிதல் ஆசிர்வாதங்களையும் கீழ்படியாமை, சாபங்களை கொண்டு வருகிறது என்பதை ஆணித்தரமாக இது தெளிவாக விவரிக்கிறது.

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

யாருக்காக எழுதப்பட்டது

இஸ்ரவேல் ஜனங்களுக்கும் வேதத்தை வாசிக்கிற அனைவருக்கும் எழுதப்பட்டது.

எழுதப்பட்ட நோக்கம்

2 இராஜாக்கள் புத்தகம் 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடர்ச்சி ஆகும். பிரிக்கப்பட்ட யூதா, இஸ்ரவேல் இராஜ்ஜியங்களின் இராஜாக்களின் சரித்திரங்களை விவரிக்கிறது. 2 இராஜாக்கள் புத்தகம் யூத ஜனங்கள் பாபிலேனுக்கும் இஸ்ரவேல் கோத்திரத்தின் ஜனங்கள் அசீரியா தேசத்திற்கும் சிறையாக கொண்டுபோகப்பட்டார்கள் என்று முடிக்கிறது.

மையக் கருத்து

சிதறடிக்கபடுதல்.

பொருளடக்கம்

1. எலிசாவின் ஊழியம் — 1:1-8:29
2. ஆகாபின் வம்சம் ஒழிக்கப்பட்டது — 9:1-11:21
3. யோவாசின் முதல் இஸ்ரவேல் தேசத்தின் சிறையிருப்பு வரை — 12:1-17:41
4. எசேக்கியா இராஜா முதல் யூத தேசத்தின் சிறையிருப்பு வரை — 18:1-25:30

## அத்தியாயம் 1

### அகசியாவுக்கு வந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பு

1 ஆகாப் மரணமடைந்தபின்பு, மோவாபியர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாகக் கலகம்செய்து பிரிந்துபோனார்கள்.
2 அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டின் ஜன்னலிலிருந்து விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி சுக-
மாகிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூவிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை
அனுப்பினான். 3 யெகோவாவுடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜா-
வின் ஆட்களைச் சந்தித்து: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூவி-
டத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? 4 இதனால் நீ ஏறிப்படுத்த கட்டிலிலிருந்து இறங்காமல், நிச்சயமாக மரணமடைவாய்
என்று யெகோவா சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்.
5 அந்த ஆட்கள் அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது: நீங்கள் ஏன் திரும்பிவந்தீர்கள் என்று அவன் அவர்களிடம்
கேட்டான். 6 அதற்கு அவர்கள்: ஒரு மனிதன் எங்களுக்கு எதிர்ப்பட்டுவந்து: நீங்கள் உங்களை அனுப்பின ராஜாவிடம்
திரும்பிப்போய், இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூவிடத்தில் விசாரிக்-
கப்போகிறாய்; இதனால் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் நிச்சயமாக மரணமடைவாய் என்று யெகோவா சொல்-
லுகிறார் என்பதை அவனிடம் சொல்லுங்கள் என்றான் என்று சொன்னார்கள். 7 அப்பொழுது அவன் அவர்களை நோக்-
கி: உங்களைச் சந்தித்து, இந்த வார்த்தைகளை உங்களிடத்தில் சொன்ன மனிதனின் தோற்றம் எப்படி இருந்தது என்று
கேட்டான். 8 அதற்கு அவர்கள்: அவன் கம்பளி உடையை அணிந்து, தோல் கச்சையைத் தன் இடுப்பிலே கட்டியிருந்-
தான் என்றார்கள்; அப்பொழுது அவன்: திஸ்பியனாகிய எலியாதான் என்று சொல்லி; 9 அவனிடத்திற்கு ஒரு தலை-
வனையும், அவனுடைய ஐம்பது வீரர்களையும் அனுப்பினான்; மலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிற அவனிடத்தில்
இவன் ஏறிப்போய்: தேவனுடைய மனிதனே, ராஜா உன்னை வரச்சொல்லுகிறார் என்றான். 10 அப்பொழுது எலியா,

# 2 இராஜாக்கள்

1 நாளாகமம்

### ஆசிரியர்

1. நாளாகமம் புத்தகத்தின் ஆசிரியர் யார் என்று தெளிவாக குறிக்கப்படவில்லை. ஆனால் வேதபாரகன் எஸ்றா தான் என்று யூத பாரம்பரியம் சொல்லுகிறது. இஸ்ரவேல் குடும்பத்தின் பெயர் அட்டவனையுடன் இந்த புத்தகம் தொடங்குகிறது. பிறகு ஐக்கிய இராஜ்ஜியமாக இருந்த இஸ்ரவேலின் மேல் தாவீது செய்த அரசாட்சியை வர்ணிக்கிறது. பழைய ஏற்பாட்டின் உயர்ந்த நபரான தாவீதின் காரியங்களை அதிவிவரமாக எழுதுகிறது. பண்டைக்காலத்து இஸ்ரவேல் தேசத்தின் மதசம்பந்தமான காரியங்களையும் அரசியல் காரியங்களையும் விவரிக்கிறது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு. 450 க்கும் 400 க்கும். இடையில் எழுதப்பட்டது.
3:19-24, வசனங்களின் அட்டவணையில் தாவீதின் ஆறாவது தலைமுறையிலுள்ள செருபாபேலின் பெயர் குறிக்கப்பட்டிருப்பதால் இந்த புத்தகம் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபிறகு எழுதப்பட்டது என்று உறுதியாகிறது.

### யாருக்காக எழுதப்பட்டது

பண்டைக்காலத்து யூத ஜனங்களுக்கும் வேதத்தை வாசிக்கிற அனைவருக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

சிறையிருப்புக்கு பிறகு திரும்பி வந்த இஸ்ரவேலர்கள் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும் என்று அறிய எழுதப்பட்டது. இஸ்ரவேலின் தெற்கு இராஜ்ஜியமான யூதா, பென்யமின் லேவி கோத்திரங்களின் சரித்திரத்தில் அதிகமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த கோத்திரங்கள் தேவனுக்கு அதிக உண்மையுள்ளவர்களாக காணப்பட்டனர். தாவீதின் வீடும் சிங்காசனமும் என்றைக்கும் இஸ்ரவேலில் நித்தியமாக ஸ்திரப்பட்டிருக்கும் என்று தாவீதோடு செய்த உடன்பட்டிக்கையை தேவன் கனம்பண்ணுகிறதைக் குறிக்கிறது. இதை பூமியின் இராஜாக்கள் செய்யமுடியாது, தேவனே மக்கள் தம்மை ஆராதனை செய்ய தம்முடைய ஆலயத்தை ஸ்திரப்படுத்தினார். பாபிலோனியர்களின் சேனைகள் சாலொமோன் கட்டின தேவாலயத்தை அழித்தார்கள்.

### மையக் கருத்து

இஸ்ரவேலின் ஆவிக்குரிய சரித்திரம்

பொருளடக்கம்

1. வம்சவரலாறுகள் — 1:1-9:44
2. சவுல் இராஜாவின் மரணம் — 10:1-14
3. தாவீதின் அபிஷேகமும் இராஜ்ஜியாபாரமும் — 11:1-29:30

## அத்தியாயம் 1

### ஆதாம் முதல் நோவா வரையுள்ள குடும்ப வரலாறு

1 ஆதாம், சேத், ஏனோஸ், 2 கேனான், மகலாலெயேல், யாரேத், 3 ஏனோக்கு, மெத்தூசலா, லாமேக்கு, 4 நோவா,
சேம், காம், யாப்பேத்.

### யாப்பேத்தின் சந்ததியினர்

5 யாப்பேத்தின் மகன்கள் கோமர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள். 6 கோமரு-
டைய மகன்கள் அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்மா என்பவர்கள். 7 யாவானுடைய மகன்கள், எலீசா, தர்ஷீஸ், கித்தீம்,
தொதானீம் என்பவர்கள்.

# எஸ்றா

### ஆசிரியர்

எபிரேய பாரம்பரியம் எஸ்றா தான் இந்த புத்தகத்தின் ஆசிரியர் என்று உறுதிப்படுத்துகிறது. இவன் பிராதான ஆசாரியன், ஆரோனின் வம்சவழியில் வந்தவன். ஆகையால் ஆசாரியனும் வேதபாரகனுமயிருந்தான். (7:1-5). பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஸ்டா அரசாளுகிற காலத்தில் தேவனுக்காக வைராக்கியம் கொண்டு, ஒரு கூட்ட யூதர்களை பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு வழி நடத்தினவன்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 7 க்கும் 440 க்கும். இடையில் எழுதப்பட்டது.
பாபிலோனிலிருந்து திரும்பி எருசலேமுக்கு வந்த பிறகு யூத தேசத்தில் எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

பாபிலோனிலிருந்து திரும்பி எருசலேமுக்கு வந்த இஸ்ரவேலர்களுக்கும் வரும்காலத்தில் வேதத்தை வாசிப்பவர்களுக்கும்.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவன் எஸ்றா மூலமாக ஜனங்களை தங்கள் சொந்த நாட்டிற்கு சரீரப் பிரகாரமாக அழைத்து வந்தார். ஆவிக்குரிய பிரகாரமாக எஸ்றா, வேதம் வாசித்து விளக்கியதின் மூலமாக ஜனங்களை பாவங்களிலிருந்து மனம் திரும்ப செய்தார். தேவனுக்கு ஊழியம் செய்யும்போது அவிசுவாசிகளிடத்திலிருந்தும் அந்தகார வல்லமைகளிடத்திலிருந்தும் பெரிய எதிர்ப்புகள் வரும். முன்னமே ஆயுத்தமாயிருந்தால் எதிர்ப்புகளை சந்திக்க பலமுள்ளவர்களாய் இருப்போம். நம்முடைய முன்னேற்றத்திற்கு விரோதமான தடைகளை விசுவாசத்தின் மூலமாய் தகர்க்கலாம். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய திட்டங்களை நிறைவேற்ற, பயமும் சோர்வுமான இரண்டு பெரிய தடைகள் வரும் என்று இந்த புத்தகம் நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

### மையக் கருத்து

மறுசீரமைப்பு

பொருளடக்கம்

1. செருபாபேல் தலைமையில் வந்த முதல் சிறையிருப்பு மக்கள் — 1:1-6:22
2. எஸ்றா தலைமையில் வந்த இரண்டாம் சிறையிருப்பு மக்கள் — 7:1-10:44

## அத்தியாயம் 1

### சிறையிருப்பிலுள்ள மக்கள் திரும்பிச் செல்ல ராஜாவாகிய கோரேஸ் உதவுதல்

1 எரேமியாவின் வாயினால் யெகோவா சொன்ன வார்த்தை நிறைவேறுவதற்காக, பெர்சியாவின் ராஜாவாகிய
கோரேசுடைய முதலாம் வருடத்திலே, யெகோவா பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியைத் தூண்டிய-
தாலே அவன்: 2 பரலோகத்தின் தேவனாகிய யெகோவா பூமியின் தேசங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவி-
லுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்ட எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். 3 அவருடைய மக்கள் எல்லோரி-
லும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனுடன் அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருச-
லேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாவுடைய ஆலயத்தைக் கட்டுவானாக; எருசலேமில் வாசம்-
செய்கிற தேவனே தேவன். 4 அந்த மக்களில் மீதியாயிருக்கிறவன் எந்த இடத்தில் தங்கியிருக்கிறானோ, அந்த இடத்தின்
மக்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாகக் காணிக்கை கொடுத்து அனுப்-
புகிறதுமல்லாமல், அவனுக்குப் பொன், வெள்ளி முதலிய பொருட்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து உதவி
செய்யவேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன் தேசமெங்கும் எழுதியனுப்பி
அறிவிப்பு செய்தான். 5 அப்பொழுது எருசலேமிலுள்ள யெகோவாவுடைய ஆலயத்தைக் கட்டுவதற்குப் போக யூதா
பென்யமீன் வம்சங்களின் தலைவர்களும் ஆசாரியர்களும் லேவியர்களும் அல்லாமல், எவர்களுடைய ஆவியை தே-

# நெகேமியா

### ஆசிரியர்

நெகேமியா (யெகோவா ஆறுதளிக்கிறார்) இந்த புத்தகத்தின் முக்கிய ஆசிரியர் என்று யூத பாரம்பரியம் ஆணித்தரமாக சொல்கிறது. அதிகமான பகுதிகள் அவனாலே எழுதப்பட்டது. அவனுடைய வாலிப நாட்களைக் குறித்து ஒரு குறிப்பும் இல்லை. பெர்சியா சாம்ராஜ்ஜியத்தில் அர்தசஷ்டா இராஜாவின் பானபாத்திரக்காரனாக அறிமுகப்படுத்தப்படுகிறான். எஸ்றா புத்தகத்துக்கு அடுத்து நெகேமியா வரிசையில் வருகிறது. இவை இரண்டும் ஒரே புத்தகமாக இருந்தது என்று வேத வல்லுனர்கள் சொல்லுகிறார்கள்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 457 க்கும் 400 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
இந்த புத்தகம், பாபிலோனியா தேசத்திலிருந்து திரும்பி வந்த பிறகு, யூத தேசத்தில் உள்ள எருசலேமில் பெர்சியர் காலத்தில் எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலர்களுக்கு எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தெரிந்துக் கொள்ளப்பட்ட இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனின் அன்பையும் வல்லமையும் அறிந்து அவருடைய உடன்படிக்கையைக்கு உண்மையைய் இருக்க அறிவுறுத்துகிறார். தேவன் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார். அவருடைய கட்டளைக்களுக்கு கீழ்படிய வேண்டிய எல்லாக் காரியங்களையும் தேவன் தருகிறார். ஜனங்கள் தங்கள் செல்வங்களை பகிர்ந்து தேவனின் காரியங்களை சேர்ந்து செய்யவேண்டும். தேவனை பின்பற்றுகிறவர்கள் மத்தியில் சுயநலம் காணப்படக்கூடாது. பணக்காரர்கள் ஏழ்மையின் நிமித்தம் ஜனங்களை ஏமாற்றக்கூடாது.
தெரிந்துக் கொள்ளப்பட்ட இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனின் அன்பையும் வல்லமையும் அறிந்து அவருடைய உடன்படிக்கையைக்கு உண்மையைய் இருக்க அறிவுறுத்துகிறார். தேவன் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறார். அவருடைய கட்டளைக்களுக்கு கீழ்படிய வேண்டிய எல்லாக் காரியங்களையும் தேவன் தருகிறார். ஜனங்கள் தங்கள் செல்வங்களை பகிர்ந்து தேவனின் காரியங்களை சேர்ந்து செய்யவேண்டும். தேவனை பின்பற்றுகிறவர்கள் மத்தியில் சுயநலம் காணப்படக்கூடாது. பணக்காரர்கள் ஏழ்மையின் நிமித்தம் ஜனங்களை ஏமாற்றக்கூடாது.

### மையக் கருத்து

மறுபடி கட்டுதல்

பொருளடக்கம்

1 நெகேமியாவின் முதல் அதிபதியின் காலம் — 1:1-12:47
2 நெகேமியாவின் இரண்டாம் அதிபதியின் காலம் — 13:1-31

அத்தியாயம் 1

### நெகேமியாவின் ஜெபம்

1 அகலியாவின் மகனாகிய நெகேமியாவின் செயல்பாடுகள்: இருபதாம் வருடம் கிஸ்லேயு † மாதத்தில் நான் சூ-
சான் என்னும் அரண்மனையில் இருக்கும்போது சம்பவித்தது †† என்னவென்றால், 2 என்னுடைய சகோதரர்களில்
ஒருவனாகிய அனானியும், வேறு சில மனிதர்களும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பி-
லிருந்து தப்பின யூதர்களின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன். 3 அதற்கு அவர்கள்: சிறையி-
ருப்பில் மீதியாக இருக்கிறவர்கள் அந்த தேசத்திலே கொடிய தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலே-

† *கிஸ்லேயு மாதம் பாபிலோனின் காலண்டரின் 9, மாதமாகும். எபிரேயர் காலண்டர் படி இது நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை ஆகும்*
†† *பெர்சிய இராஜ்ஜியத்தின் அர்தசஷ்டா இராஜாவின் (கி. மு. 465-425) ஆட்சிக் காலத்தில் ஏலம் தேசத்தின் தலைநகரமான சூசன் அரண்மனையில் நெகேமியா இருந்தான்*

## அத்தியாயம் 7

7 மதில் கட்டிமுடிந்து, கதவுகள் போடப்பட்டு, வாசல் காவலாளர்களையும், பாடகர்களையும், லேவியர்களையும்
ஏற்படுத்தினபின்பு, 2 நான் என்னுடைய சகோதரனாகிய அனானியையும், அநேகரைவிட உண்மையுள்ளவனும்
தேவனுக்குப் பயந்தவனுமாக இருந்த அரண்மனைத் தலைவனாகிய அனனியாவையும், எருசலேமின் காவல் விசார-
ணைக்கு ஏற்படுத்தினேன். 3 அவர்களை நோக்கி: வெயில் ஏறும்வரை எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம்;
நீங்கள் நிற்கும்போதே கதவுகளை அடைத்து தாழ்ப்பாள் போட்டு, எருசலேமில் குடியிருக்கிற காவலாளர்கள் அவரவர்
தங்கள் காவலிலே, அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிராக நிறுத்தப்படவேண்டும் என்றேன்.

### சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் பட்டியல்

4 பட்டணம் விசாலமும் பெரிதுமாக இருந்தது; அதற்குள்ளே மக்கள் குறைவாக இருந்தார்கள், வீடுகளும் கட்டப்பட-
வில்லை. 5 அப்பொழுது வம்ச அட்டவணைகளைப் பார்ப்பதற்கு, நான் பிரபுக்களையும் அதிகாரிகளையும் மக்களை-
யும் கூடிவரச்செய்ய, என்னுடைய தேவன் என்னுடைய மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக்கினார்; முதலில் வந்தவர்-
களின் வம்ச அட்டவணைப் புத்தகம் அப்பொழுது எனக்கு கிடைத்தது; அதிலே எழுதியிருக்க நான் கண்டது என்ன-
வென்றால்: 6 பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போனவர்களும், சிறையிருப்பிலிருந்து செரு-
பாபேலோடும், யெசுவா, நெகேமியா, அசரியா, ராமியா, நகமானி, மொர்தெகாய், பில்சான், மிஸ்பெரேத், பிக்வாயி,
நெகூம், பானா என்பவர்களோடுங்கூட வந்து, 7 எருசலேமுக்கும் யூதாவுக்கும் திரும்பித் தங்கள் தங்கள் பட்டணங்களி-
லே குடியேறினவர்களுமான இந்த தேசத்தின் ஆண்களாகிய இஸ்ரவேல் மக்களான மனிதர்களின் எண்ணிக்கையாவது:
8 பாரோஷின் வம்சத்தினர்கள் 2,172 பேர். 9 செபத்தியாவின் வம்சத்தினர்கள் 372 பேர். 10 ஆராகின் வம்சத்தினர்கள் 652
பேர். 11 யெசுவா யோவாப் என்பவர்களின் சந்ததியிலிருந்த பாகாத் மோவாபின் வம்சத்தினர்கள் 2,818 பேர். 12 ஏலா-
மின் வம்சத்தினர்கள் 1,254 பேர். 13 சத்தூவின் வம்சத்தினர்கள் 845 பேர். 14 சக்காயின் வம்சத்தினர்கள் 760 பேர். 15 பின்-
னூயியின் வம்சத்தினர்கள் 648 பேர். 16 பெபாயின் வம்சத்தினர்கள் 628 பேர். 17 அஸ்காதின் வம்சத்தினர்கள் 2,322
பேர். 18 அதோனிகாமின் வம்சத்தினர்கள் 667 பேர். 19 பிக்வாயின் வம்சத்தினர்கள் 2,067 பேர். 20 ஆதீனின் வம்சத்தினர்-
கள் 655 பேர். 21 எசேக்கியாவின் சந்ததியான அதேரின் வம்சத்தினர்கள் 98 பேர். 22 ஆசூமின் வம்சத்தினர்கள் 328 பேர்.
23 பேசாயின் வம்சத்தினர்கள் 324 பேர். 24 ஆரீப்பின் வம்சத்தினர்கள் 112 பேர். 25 கிபியோனின் வம்சத்தினர்கள் 95
பேர். 26 பெத்லகேம் ஊரைச்சேர்ந்தவர்களும், நெத்தோபா ஊரைச்சேர்ந்தவர்களும் 188 பேர். 27 ஆனதோத்தூர் மனிதர்-
கள் 128 பேர். 28 பெத் அஸ்மாவேத் ஊரைச்சேர்ந்தவர்கள் 42 பேர். 29 கீரியாத்யாரீம், கெபிரா, பேரோத் ஊர்களின் மனி-
தர்கள் 743 பேர். 30 ராமா, கேபா ஊர்களின் மனிதர்கள் 621 பேர். 31 மிக்மாஸ் ஊரைச்சேர்ந்தவர்கள் 122 பேர். 32 பெத்-
தேல், ஆயி ஊர்களின் மனிதர்கள் 123 பேர். 33 வேறொரு நேபோ ஊரைச்சேர்ந்தவர்கள் 52 பேர். 34 மற்றொரு ஏலாம்
வம்சத்தினர்கள் 1,254 பேர். 35 ஆரிம் வம்சத்தினர்கள் 320 பேர். 36 எரிகோ வம்சத்தினர்கள் 345 பேர். 37 லோத், ஆதீத்,
ஓனோ ஊர்களின் வம்சத்தினர்கள் 721 பேர். 38 செனாகா வம்சத்தினர்கள் 3,930 பேர். 39 ஆசாரியர்களானவர்கள்: யெசு-
வா குடும்பத்தானாகிய யெதாயாவின் வம்சத்தினர்கள் 973 பேர். 40 இம்மேரின் வம்சத்தினர்கள் 1,052 பேர். 41 பஸ்கூ-
ரின் வம்சத்தினர்கள் 1,247 பேர். 42 ஆரீமின் வம்சத்தினர்கள் 1,017 பேர். 43 லேவியர்களானவர்கள்: ஒதியாவின் சந்த-
திக்குள்ளே கத்மியேலின் மகனாகிய யெசுவாவின் வம்சத்தினர்கள் 74 பேர். 44 பாடகர்கள்: ஆசாபின் வம்சத்தினர்கள்
148 பேர். 45 வாசல் காவலாளர்கள்: சல்லூமின் வம்சத்தினர்கள், அதேரின் வம்சத்தினர்கள், தல்மோனின் வம்சத்தினர்-
கள், அக்கூபின் வம்சத்தினர்கள், அதிதாவின் வம்சத்தினர்கள், சோபாயின் வம்சத்தினர்கள், ஆக 138 பேர். 46 ஆலயப்
பணியாளர்கள்: சீகாவின் வம்சத்தினர்கள், அசுபாவின் வம்சத்தினர்கள், தபாகோத்தின் வம்சத்தினர்கள், 47 கேரோசின்
வம்சத்தினர்கள், சீயாவின் வம்சத்தினர்கள், பாதோனின் வம்சத்தினர்கள், 48 லெபானாவின் வம்சத்தினர்கள், அகாபா-
வின் வம்சத்தினர்கள், சல்மாயின் வம்சத்தினர்கள், 49 ஆனானின் வம்சத்தினர்கள், கித்தேலின் வம்சத்தினர்கள், காகாரின்
வம்சத்தினர்கள், 50 ராயாகின் வம்சத்தினர்கள், ரேத்சீனின் வம்சத்தினர்கள், நெகோதாவின் வம்சத்தினர்கள், 51 காசாமின்
வம்சத்தினர்கள், ஊசாவின் வம்சத்தினர்கள், பாசெயாகின் வம்சத்தினர்கள், 52 பேசாயின் வம்சத்தினர்கள், மெயுநீமின்
வம்சத்தினர்கள், நெபுசீமின் வம்சத்தினர்கள், 53 பக்பூக்கின் வம்சத்தினர்கள், அகுபாவின் வம்சத்தினர்கள், அர்கூரின்
வம்சத்தினர்கள், 54 பஸ்லூதின் வம்சத்தினர்கள், மெகிதாவின் வம்சத்தினர்கள், அர்ஷாவின் வம்சத்தினர்கள், 55 பர்கோ-
சின் வம்சத்தினர்கள், சிசெராவின் வம்சத்தினர்கள், தாமாவின் வம்சத்தினர்கள், 56 நெத்சியாகின் வம்சத்தினர்கள், அதி-
பாவின் வம்சத்தினர்கள், 57 சாலொமோனுடைய வேலைக்காரர்களின் வம்சத்தினர்கள்: சோதாயின் வம்சத்தினர்கள்,
சொபெரேத்தின் வம்சத்தினர்கள், பெரிதாவின் வம்சத்தினர்கள், 58 யாலாவின் வம்சத்தினர்கள், தர்கோனின் வம்சத்தி-
னர்கள், கித்தேலின் வம்சத்தினர்கள், 59 செபத்தியாவின் வம்சத்தினர்கள், அத்தீலின் வம்சத்தினர்கள், பொகெரேத் செபா-
யிமிலுள்ள வம்சத்தினர்கள், ஆமோனின் வம்சத்தினர்கள். 60 ஆலய பணியாளர்களும், சாலொமோனுடைய வேலை-
யாட்களின் வம்சத்தினர்களும் சேர்ந்து முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டுபேர். 61 தெல்மெலாகிலும், தெல் அர்சாவிலும்,
கேருபிலும், ஆதோனிலும், இம்மேரிலும் இருந்துவந்தும், தாங்கள் இஸ்ரவேலர்கள் என்று தங்கள் பிதாக்களின் வம்சத்-
தையும், தங்கள் பூர்வத்தையும் சொல்லமுடியாமல் இருந்தவர்கள்: 62 தெலாயாவின் வம்சத்தினர்கள், தொபியாவின்
வம்சத்தினர்கள், நெகோதாவின் வம்சத்தினர்கள், ஆக 642 பேர். 63 ஆசாரியர்களில் அபாயாவின் வம்சத்தினர்கள், கோ-
சின் வம்சத்தினர்கள், கீலேயாத்தியனான பர்சிலாயின் மகள்களில் ஒருத்தியை திருமணம்செய்து, அவர்களுடைய வம்-
சத்தின் பெயரிடப்பட்ட பர்சிலாயியின் வம்சத்தினர்கள். 64 இவர்கள் தங்களுடைய வம்ச அட்டவணையைத் தேடி,

# எஸ்தர்

### ஆசிரியர்

இந்த புத்தத்தின் ஆசிரியர் யூதனாயும் பெர்சியா இராஜ்ஜியத்தின் அரண்மனையின் காரியங்களை அறிந்தவனாயும் இருந்தான். அரண்மனையின் காரியங்கள், பாரம்பரியங்கள், நிகழ்ச்சிகளை தன் கண்களால் கண்டவனால் எழுதப்பட்டது. செருபாபேல் தலைமையில் யூதா தேசத்திற்கு திரும்பி வந்தவர்களுக்கு எழுதப்பட்டது என்று வேத வல்லுனர்கள் நம்புகிறார்கள். சிலர் மொர்தெகாய் தான் இதன் ஆசிரியர் என்கிறார்கள். சிலர் மற்றவர்கள் என்று சொல்கிறார்கள்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 464 க்கும் 331 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது. இந்த சரித்திர கதை பெர்சியாவின் இராஜாவாகிய அகாஸ்வேருவின் காலத்தில்.
தலைநகரமான சூசானின் அரண்மனையில் நடந்தது.

### யாருக்காக எழுதப்பட்டது

பூரிம் பண்டிகை ஆரம்பமானக் காரணத்தை யூத ஜனங்கள் அறிந்துக் கொள்ள இந்த எஸ்தர் புத்தகம் எழுதப்பட்டது. எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் எப்படி மீட்பு அடைந்தார்களோ அதே மாதிரி இந்த பண்டிகை யூதர்களின் அழிவிலிருந்து இரட்சிக்கப்பட்டதைக் குறித்து ஞாபகப்படுத்தப்பட வருடம்தோறும் கொண்டாடப்படுகிறது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவன் மனிதர்களின் சித்தத்தை மாற்றி, வெறுப்புகளை நொறுக்கி, ஆபத்துக்காலத்தில் மனிதர்கள் மத்தியில் கிரியை செய்து உதுவுகிறார் என்பதை காட்டுகிறது. தம்முடைய ஜனங்கள் மத்தியில் தேவன் கிரியை செய்கிறார் என்று காண்பிக்கிறது. தம்முடைய தெய்வீக திட்டங்களை நிறைவேற்ற மனிதனுடைய தீர்மானங்களையும், செயல்களையும் உபயோகப்படுத்துவது போல் எஸ்தரின் வாழ்க்கை சூழ்நிலைகளை உபயோகப்படுத்திக்கொண்டார். பூரிம் பண்டிகை ஸ்தாபிக்கப்பட்டதை எஸ்தர் புத்தகம் பதிவு செய்கிறது. இன்றைய காலத்திலும் யூதர்கள் பூரிம் பண்டிகை நாட்களில் எஸ்தர் புத்தகத்தை வாசிக்கிறார்கள்.

### மையக் கருத்து

மாறாட்டம்/ தவறான போக்கு

பொருளடக்கம்

1 எஸ்தர் இராணியாக தெரிந்தெடுக்கப்படுகிறாள் — 1:1-2:23
2 தேவ ஜனங்களுக்கு வந்த பேராபத்து — 3:1-15
3 எஸ்தரும் மொர்தெகாயும் எடுத்த நடவடிக்கைகள் — 4:1-5:14
4 மரண ஆபத்திலிருந்து யூதர்களுக்கு விடுதலை — 6:1-10:3

## அத்தியாயம் 1

### ராணியாகிய வஸ்தி பதவியிழத்தல்

1 இந்திய தேசம் முதல் கூஷ் [†]தேசம்வரையுள்ள 127 நாடுகளையும் அரசாட்சி செய்த அகாஸ்வேருவின் நாட்களி-
லே சம்பவித்ததாவது: 2 ராஜாவாகிய அகாஸ்வேரு சூசான் அரண்மனையில் இருக்கிற தன்னுடைய ராஜ்ஜியத்தின்
சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருந்தான். 3 அவனுடைய அரசாட்சியின் மூன்றாம் வருடத்திலே தன்னுடைய அதிகாரிக-
ளுக்கும் வேலைக்காரர்களுக்கும் விருந்தளித்தான்; அப்பொழுது பெர்சியா மேதியா தேசங்களிலுள்ள மகத்தானவர்க-
ளும், நாடுகளின் ஆளுனர்களும், பிரபுக்களும், அவனுடைய சமுகத்தில் வந்திருந்தார்கள். 4 அவன் தன்னுடைய ராஜ்-
ஜியத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன்னுடைய மகத்துவத்தின் மகிமையான பெருமைகளையும் 180 நாட்கள்-
வரையும் காண்பித்துக்கொண்டிருந்தான். 5 அந்த நாட்கள் முடிந்தபோது, ராஜா சூசான் அரண்மனையில் வந்திருந்த பெ-

† *எத்தியோப்பியா*

# யோபு

### ஆசிரியர்

இந்த புத்தகத்தை யார் எழுதினார்கள் என்று சரியான ஆசிரியர் குறிப்பிடபடவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருப்பதாக கருதபப்டுகிறது. வேத புத்தகங்களிலே எழுதப்பட்ட புத்தகங்களில் யோபு தான் முதல் புத்தகம் என்று சொல்லப்படுகிறது. யோபு தன் வாழ்க்கையில் சொல்லிமுடியாத, தாங்கமுடியாத துன்பங்களை அனுபவித்தவன். அப்படிப்பட்ட துன்பம் ஏன் யோபுக்கு வந்தது என்று அவனுடைய நண்பர்கள் காரணம் தேடினார்கள் ஆனால் சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. யோபு, தேமானியான எலிப்பாஸ், சூகியனான பில்தாது, நாகமாத்தியனான சோப்பார், எலிகூ, இந்த புத்தகத்தின் முக்கிய நபர்களாக இருக்கிறார்கள்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

யார் என்று நிச்சயமாக அறிய முடியவில்லை.
சிறைப்பட்டப் பிறகு எழுதப்பட்டிருக்கலாம்.

### யாருக்காக எழுதப்பட்டது

பண்டைய யூதர்களுக்கும் வேதம் வாசிக்கிற அனைவருக்கும் எழுதப்பட்டது, எகிப்தில் அடிமைத்தனத்தில் வேதனை அனுபவித்திக்கொண்டிருந்த இஸ்ரவேலர்களுக்கு யோபுவின் சரித்திரத்தினால் மோசேயினால் ஆறுதல் சொல்லப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

### எழுதப்பட்ட நோக்கம்

இந்த புத்தகத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்றால்: சாத்தானால் நமக்கு பணப் பிரச்சனைகளையும் சரீர அழிவுகளை கர்த்தருடைய அனுமதியில்லாமல் கொண்டுவரமுடியாது. உலகில் நடக்கிற அநியாயமான துன்பங்களுக்கு காரணம் என்ன என்று மனித அறிவுக்கு எட்டாததாய் இருக்கிறது. துன்மார்க்கன் தன் அக்கிரமத்துக்கு ஏற்றபடி தீமையை நிச்சயமாக அனுபவிப்பான். நம்மை சுத்திகரிக்க, சோதிக்க, பாடம் கற்றுக்கொள்ள சில சமயங்களில் துன்பங்கள் அனுமதிக்கப்படுகிறது.

### மையக் கருத்து

பாடுகள் மூலம் ஆசிர்வாதம்.

பொருளடக்கம்

1. முகவுரையும் சாத்தானால் பாடுபடுவதும் — 1:1-2:13
2. யோபு தன் மூன்று நண்பர்களுடன் தன்னுடைய துன்பங்களை பகிர்ந்துக் கொண்டான் — 3:1-31:40
3. எலிப்பாஸ் தேவனுடைய நன்மைகளை அறிவிக்கிறான் — 32:1-37:24
4. தேவன் தம்முடைய சர்வ வல்லமையை வெளிப்படுத்துகிறார் — 38:1-41:34
5. தேவன் யோபுவை திரும்ப ஸ்தாபிக்கிறார் — 42:1-17

## அத்தியாயம் 1

### முன்னுரை

1 ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பெயருடைய ஒரு மனிதன் இருந்தான்: அந்த மனிதன் உத்தமனும் சன்மார்க்-
கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். 2 அவனுக்கு ஏழு மகன்களும் மூன்று
மகள்களும் பிறந்தார்கள். 3 அவனுக்கு 7,000 ஆடுகளும், 3,000 ஒட்டகங்களும், 500 ஏர்மாடுகளும், 500 கழுதைகளு-
மாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, மிகுதியான வேலைக்காரர்களும் இருந்தார்கள்; அதினால் அந்த மனிதன் கிழக்-
குப்பகுதியின் மக்களில் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். 4 அவனுடைய மகன்கள், அவனவன் தன்தன் நாளிலே
தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களுடன் உணவு சாப்பிட அழைப்பார்கள். 5 வி-
ருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் மகன்கள் பாவம் செய்து, தே-
வனைத் தங்கள் இருதயத்திலே நிந்தித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை வரவழைத்து, பரிசுத்தப்படுத்தி, அதி-

# சங்கீதங்கள்

### ஆசிரியர்

சங்கீதங்கள் உணர்ச்சிபாடலுக்குரிய மொழிநடையில் அமைந்திருக்கிற ஒரு கூட்டு பாடல்கள் ஆகும். இதை அனேக ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். தாவீது 73 சங்கீதங்களையும் ஆசாப் 12, சங்கீதங்களையும் கோராவின் புத்திரர்கள் 9 சங்கீதங்களையும் ஏதான் 1, சங்கீதமும், மோசே 1, 90 சங்கீதமும் எழுதியுள்ளார்கள் சில சங்கீதங்களின் ஆசிரியர்களின் பெயர்கள் அறியப்படவில்லை. சாலொமோனும் மோசேயும் தவிர மற்ற சங்கீதங்கள் தாவீதின் ஆட்சிக் காலத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆசாரியர்களும் லேவியர்களும் எழுதியவைகள்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 1440 க்கும் 430 க்கும். இடையில் எழுதப்பட்டது.
தனி நபர்களின் சங்கீதங்கள் மோசேயில் தொடங்கி பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பி எருசலேமுக்கு வந்த காலங்கள் வரை எழுதப்பட்டு இருக்கிறது. இவைகள் மோசேயினாலும் தாவீதினாலும் சாலோமோனினாலும் எஸ்றாவினாலும் எழுதப்பட்டிருப்பதால் சங்கீதங்களை மாத்திரம் எழுதி முடிக்க ஆயிர வருடங்கள் ஆகியிருக்கிறது.

### யாருக்காக எழுதப்பட்டது

தேவன் இஸ்ரவேல் தேசத்திற்கு செய்த அற்புதமான காரியங்களை இஸ்ரவேலர்களர்கள் ஞாபகத்தில் வைக்கவும் கர்த்தரை விசுவாசிக்கிற எல்லாருக்காகவும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

சங்கீதங்கள், தேவனையும் அவருடைய சிருஷ்டிப்பையும், யுத்தங்களையும், ஞானத்தையும் பாவத்தையும் தீமையையும் நீதியையும், நியாத்தீர்ப்புகளையும் மேசியாவின் வருகையைக் குறித்தும் பறைசாற்றுகின்றன. சங்கீதங்கள், தேவன் யார் என்றும் அவர் நமக்கு செய்த காரியங்களுக்கும் நன்மைகளுக்கா தேவனை ஸ்தோத்திரிக்க நம்மை உற்சாகப்படுத்துகின்றன. சங்கீதங்கள் தேவனுடைய மகத்துவங்களை வெளிப்படுத்துகின்றன, ஆபத்துக் காலங்களில் நமக்கு அவர் உண்மையுள்ளவர் என்று உறுதிப்படுத்துகின்றன, அவருடைய வசனங்களின் ஆளுகையின் அடிப்படையையும் வல்லமைகளையும் ஆணித்தரமக்குகின்றன.

### மையக் கருத்து

ஸ்தோத்திரம்.
பொருளடக்கம்
1 மேசியாவின் புத்தகம் — 1:1-41:13
2 விருப்பத்தின் புத்தகம். அதிகாரங்கள் — 42:1-72:20
3 இஸ்ரவேலின் புத்தகம். அதிகாரங்கள் — 73:1-89:52
4 தேவனுடைய ஆளுகையின் புத்தகம். அதிகாரங்கள் — 90:1-106:48
5 ஸ்தோத்திரத்தின் புத்தகம். அதிகாரங்கள் — 107:1-150:6

## சங்கீதம் 1

1 துன்மார்க்கர்களுடைய ஆலோசனையின்படி நடக்காமலும்,
பாவிகளுடைய வழியில் நிற்காமலும்,
பரியாசக்காரர்கள் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,
2 யெகோவாவுடைய வேதத்தில் பிரியமாக இருந்து,
இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாக இருக்கிற மனிதன் பாக்கியவான்.
3 அவன் நீரோடை ஓரமாக நடப்பட்டு,
தன்னுடைய காலத்தில் தன்னுடைய கனியைத் தந்து,
இலை உதிராமல் இருக்கிற மரத்தைப்போல இருப்பான்.
அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

தமது வலதுகை செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து,
தமது பரிசுத்த வானத்திலிருந்து
அவருடைய விண்ணப்பத்திற்கு பதில்கொடுப்பார்.
7 சிலர் இரதங்களைக்குறித்தும்,
சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்;
நாங்களோ எங்கள் தேவனாகிய யெகோவாவுடைய பெயரைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்.
8 அவர்கள் முறிந்து விழுந்தார்கள்;
நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்.
9 யெகோவாவே, இரட்சியும்;
நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக.

## சங்கீதம் 21

*இசைத் தலைவனுக்கு தாவீது தந்த பாடல்.*

21 யெகோவாவே, உம்முடைய வல்லமையிலே இராஜா மகிழ்ச்சியாக இருக்கிறார்;
உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாகச் சந்தோஷப்படுகிறார்!
2 அவருடைய மனவிருப்பத்தின்படி நீர் அவருக்குத் தந்தருளி,
அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாமலிருக்கிறீர். (சேலா)
3 உத்தம ஆசீர்வாதங்களோடு நீர் அவருக்கு எதிர்கொண்டுவந்து,
அவர் தலையில் பொற்கிரீடம் அணிவிக்கிறீர்.
4 அவர் உம்மிடத்தில் ஆயுளைக்கேட்டார்;
நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள நீடித்த ஆயுளை அளித்தீர்.
5 உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாக இருக்கிறது;
மேன்மையையும் மகத்துவத்தையும் அவருக்கு கொடுத்தீர்.
6 அவர் நீடித்த ஆசீர்வாதங்களை அவர்களுக்கு கொடுக்கிறார்;
அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்.
7 ஏனெனில் இராஜா யெகோவாமேல் நம்பிக்கையாக இருக்கிறார்;
உன்னதமான தேவனுடைய தயவினால் அசைக்கப்படாமல் இருப்பார்.
8 உமது கை உமது எதிரிகள் எல்லோரையும் எட்டிப்பிடிக்கும்;
உமது வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.
9 உமது கோபத்தின் காலத்திலே
அவர்களை நெருப்புச் சூளையாக்கிப்போடுவீர்;
யெகோவா தமது கோபத்திலே அவர்களை அழிப்பார்;
நெருப்பு அவர்களை அழிக்கும்.
10 அவர்கள் பிள்ளைகளை பூமியிலிருந்தும்
அவர்கள் சந்ததியை மனுமக்களிலிருந்தும் அழிப்பீர்.
11 அவர்கள் உமக்கு விரோதமாக தீங்கு நினைத்தார்கள்;
தீவினை செய்ய முயன்றார்கள்;
ஒன்றும் வாய்க்காமல்போனது.
12 உம்முடைய அம்புகளை நாணேற்றி அவர்கள் முகத்திற்கு நேரே எய்து அவர்களைத் திரும்பி ஓடச்செய்கிறீர்.
13 யெகோவாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்;
அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடித் துதிப்போம்.

## சங்கீதம் 22

*(இசைத் தலைவனுக்கு தாவீது தந்த பாடல்.)*

22 என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?
எனக்கு உதவி செய்யாமலும்,
நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேட்காமலும் ஏன் தூரமாக இருக்கிறீர்?
2 என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன்,
பதில் கொடுக்கவில்லை;
இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதி இல்லை.
3 இஸ்ரவேலின் துதிகளுக்குள் தங்கியிருக்கிற தேவனே நீரே பரிசுத்தர்.
4 எங்களுடைய முன்னோர்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள்;
நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

என்னுடைய இரட்சிப்பின் தேவனே,
என்னைத் தள்ளிவிடாமலிரும் என்னைக் கைவிடாமலிரும்.
10 என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும்,
யெகோவா என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்.
11 யெகோவாவே, உமது வழியை எனக்குப் போதியும்,
என்னுடைய எதிராளிகளினிமித்தம் சரியான பாதையில் என்னை நடத்தும்.
12 என் எதிரிகளின் விருப்பத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்கவேண்டாம்;
பொய்ச்சாட்சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிறவர்களும்
எனக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள்.
13 நானோ, உயிருள்ளவர்களின் தேசத்திலே
யெகோவாவுடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசித்தேன் †.
14 யெகோவாவுக்குக் காத்திரு, தைரியமாக இரு,
அவர் உன்னுடைய இருதயத்தை நிலையாக நிறுத்துவார்,
கர்த்தருக்கே காத்திரு.

## சங்கீதம் 28

*தாவீதின் பாடல்.*

28 என் கன்மலையாகிய யெகோவாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்;
நீர் கேட்காதவர்போல மவுனமாக இருக்கவேண்டாம்;
நீர் மவுனமாக இருந்தால் நான் கல்லறையில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாவேன்.
2 நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, உம்முடைய மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராகக் கையெடுக்கும்போது,
என்னுடைய விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும்.
3 அருகில் உள்ளவனுக்குச் சமாதான வாழ்த்துதலைச் சொல்லியும்,
தங்களுடைய இருதயங்களில் தீமைகளை வைத்திருக்கிற துன்மார்க்கர்களோடும் அக்கிரமக்காரர்களோடும் என்னை வாரிக்கொள்ளாமலிரும்.
4 அவர்களுடைய செயல்களுக்கும் அவர்களுடைய நடத்தைகளின் தீங்கிற்கும் சரியானதாக அவர்களுக்குச் செய்யும்;
அவர்கள் கைகளின் செய்கைக்கு சரியானதாக அவர்களுக்குக் கொடும்,
அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும்.
5 அவர்கள் யெகோவாவுடைய செய்கைகளையும் அவர் கைகளின் செயல்களையும் உணராதபடியால்,
அவர்களை இடித்துப்போடுவார், அவர்களைக் கட்டமாட்டார்.
6 யெகோவாவுக்கு வாழ்த்துதல் உண்டாகட்டும்;
அவர் என்னுடைய விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்.
7 யெகோவா என் பெலனும் என் கேடகமுமாக இருக்கிறார்;
என் இருதயம் அவரை நம்பி இருந்தது; நான் உதவி பெற்றேன்;
ஆகையால் என்னுடைய இருதயம் சந்தோஷப்படுகிறது;
என் பாடலினால் அவரைத் துதிப்பேன்.
8 யெகோவா அவர்களுடைய பெலன்;
அவரே தாம் அபிஷேகம் செய்தவனுக்கு பாதுகாப்பான அடைக்கலமானவர்.
9 தேவனே நீர் உமது மக்களைப் பாதுகாத்து, உமது உரிமை சொத்தை ஆசீர்வதியும்;
அவர்களுக்கு உணவளித்து, அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

## சங்கீதம் 29

*தாவீதின் பாடல்.*

29 தேவ பிள்ளைகளே, யெகோவாவுக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்;
கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.
2 யெகோவாவுடைய பெயருக்கேற்ற மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்;
பரிசுத்த அலங்காரத்துடனே யெகோவாவை தொழுதுகொள்ளுங்கள்.
3 யெகோவாவுடைய சத்தம் சமுத்திரங்கள் மேல் தொனிக்கிறது;
மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்;
யெகோவா திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார்.
4 யெகோவாவுடைய சத்தம் வல்லமையுள்ளது;
யெகோவாவுடைய சத்தம் மகத்துவமுள்ளது.

---

† *விசுவாசிக்காமல் இருந்தால் கெட்டுப்போயிருப்பேன்*

## சங்கீதம் 124

*தாவீதின் ஆரோகண பாடல்.*

124 மனிதர்கள் நமக்கு விரோதமாக எழும்பினபோது,
யெகோவா நமது பக்கத்தில் இல்லாவிட்டால்,
2 யெகோவா தாமே நமது பக்கத்தில் இல்லாவிட்டால்,
3 அவர்களுடைய கோபம் நம்மேல் எரியும்போது,
நம்மை உயிரோடு விழுங்கியிருப்பார்கள்.
4 அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து,
வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி,
5 கொந்தளிக்கும் தண்ணீர்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டுபோயிருக்கும்
என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.
6 நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடுக்காமல்
இருக்கிற யெகோவாவுக்கு நன்றி.
7 வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல
நம்முடைய ஆத்துமா தப்பினது,
கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.
8 நம்முடைய உதவி வானத்தையும் பூமியையும் உண்டாக்கின
யெகோவாவுடைய பெயரில் உள்ளது.

## சங்கீதம் 125

125 யெகோவாவை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும்
சீயோன் மலையைப்போல் இருப்பார்கள்.
2 மலைகள் எருசலேமைச் சுற்றிலும் இருக்கிறதுபோல்,
யெகோவா இதுமுதல் என்றென்றைக்கும்
தம்முடைய மக்களைச் சுற்றிலும் இருக்கிறார்.
3 நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்களுடைய கைகளை நீட்டாதபடிக்கு,
துன்மார்க்கத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சொத்தின்மேல் நிலைத்திருக்காது.
4 யெகோவாவே, நல்லவர்களுக்கும் இருதயத்தில் செம்மையானவர்களுக்கும் நன்மை செய்யும்.
5 தங்களுடைய கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக்
யெகோவா அக்கிரமக்காரர்களோடு போகச்செய்வார்.
இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு.

## சங்கீதம் 126

*ஆரோகண பாடல்.*

126 சீயோனின் சிறையிருப்பைக் யெகோவா திருப்பி எருசலேமுக்கு கொண்டு வந்தபோது,
கனவு காண்கிறவர்கள்போல் இருந்தோம்.
2 அப்பொழுது நம்முடைய வாய் சிரிப்பினாலும்,
நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது;
அப்பொழுது: யெகோவா இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்
என்று தேசங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.
3 யெகோவா நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்;
இதற்காக நாம் மகிழ்ந்திருக்கிறோம்.
4 யெகோவாவே,
தெற்கத்திய வெள்ளங்களைத் திருப்புவதுபோல,
எங்களுடைய சிறையிருப்பைத் திருப்பும்.
5 கண்ணீரோடு விதைக்கிறவர்கள்
கெம்பீரத்தோடு அறுப்பார்கள்.
6 அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்;
ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு
கெம்பீரத்தோடு திரும்பிவருவான்.

## சங்கீதம் 127

*சாலொமோனின் ஆரோகண பாடல்.*

# நீதிமொழிகள்

### ஆசிரியர்

சாலோமோன் ராஜா நீதிமொழிகளின் முக்கிய ஆசிரியர். நீதிமொழிகள் 1:1 லும், 10: 1 லும், 25:1 லும் சாலோமோனின் பெயர் காணப்படுகிறது. மற்ற ஆசிரியர்கள் ஆகூர், ராஜாவாகிய லேமுவேல் எசேக்கியா ராஜாவின் ஞானிகளும் எழுதியிருக்கிறார்கள். மற்ற வேத புத்தகத்தைப் போல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை மறைமுகமாக சுட்டிகாட்டுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய நீதியின் வழியான தேவனுடைய வழியில் நடக்க போதிக்கிறது. சாலோமோன் தன் வாழ்க்கை அனுபவத்தில் கற்றுக்கொண்ட காரியங்களை எழுதிவைக்க தேவனால் ஏவப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. மு. 971 க்கும் 686 க்கும். இடையில் எழுதப்பட்டது.
ஆயிரம் வருடங்களுக்கு முன்பு சாலோமோன் ராஜாவாக ஆட்சி செய்த காலத்தில் எழுதப்பட்ட நீதிமொழிகளில் சொல்லப்பட்ட ஞான வசனங்கள் எல்லாக் காலத்திற்கும் எல்லா கலாச்சார மக்களுக்கும் பொருந்தும் வண்ணமாக இருக்கிறது.

### யாருக்காக எழுதப்பட்டது

இதில் எல்லா வயதினர்களுக்கும் சம்பந்தப்பட்ட காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது ஞானத்தைத் தேடும் வாலிப ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருத்தமாயிருக்கிறது. கடைசியாக தேவ பக்தியாய் வாழ விரும்பும் எல்லாருக்கும் அறிவுரை தருகிறது.

### எழுதப்பட்ட நோக்கம்

வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள காரியங்களுக்கு சொல்லப்பட்ட தேவனின் ஆலோசனைகளை சாலோமோன் இந்த புத்தகத்தில் வெளிப்படுத்தியுள்ளான். எந்த ஒரு காரியமும் விட்டுவிடாமல் உபதேசங்களை சொல்லியுள்ளான். உடலுறவுக் காரியங்களையும், வியாபாரக் காரியங்களையும், குறித்தும், தனிப்பட்ட நடக்கையைக்குறித்தும் அன்பைக்குறித்தும் ஒழுக்கத்தைக் குறித்தும் பணத்தைக்குறித்தும் கடனைக் குறித்தும் பிள்ளை வளர்ப்பைக்குறித்தும் சாராயம் குடிப்பதைக் குறித்தும் அரசியலைக்குறித்தும், பழிவாங்குவதைக்குறித்தும் தேவபக்தியாய் நடப்பதைக்குறித்தும் எல்லா ஞானமுள்ள ஆலோசனைகளை எழுதியிருக்கிறான்.

### மையக் கருத்து

ஞானம்

பொருளடக்கம்

1. ஞானத்தின் மதிப்புகள் — 1:1-9:18
2. சாலோமோனின் நீதிமொழிகள் — 10:1-22:16
3. ஞானிகளின் வாசகங்கள் — 22:17-29:27
4. அகூரின் ஞான வார்த்தைகள் — 30:1-33
5. லேமுவேலின் ஞான வார்த்தைகள் — 31:1-31

### அத்தியாயம் 1

#### மையக் கருத்து

1 தாவீதின் மகனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்:
2 இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து,
புத்திமதிகளை உணர்ந்து,
3 விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்.

## அத்தியாயம் 14

### விவேகமும் அலட்சியமும்

14 புத்தியுள்ள பெண் தன்னுடைய வீட்டைக் கட்டுகிறாள்;
புத்தியில்லாத பெண்ணோ தன்னுடைய கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்.
2 நிதானமாக நடக்கிறவன் யெகோவாவுக்குப் பயப்படுகிறான்;
தன்னுடைய வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம்செய்கிறான்.
3 மூடன் வாயிலே அவனுடைய அகந்தைக்கு ஏற்ற கோல் உண்டு;
ஞானவான்களின் உதடுகளோ அவர்களைக் காப்பாற்றும்.
4 எருதுகள் இல்லாத இடத்தில் களஞ்சியம் வெறுமையாக இருக்கும்;
காளைகளின் பெலத்தினாலோ மிகுந்த வரத்துண்டு.
5 மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லமாட்டான்;
பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான்.
6 பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடிக்கமாட்டான்;
புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாகவரும்.
7 மூடனுடைய முகத்தைவிட்டு விலகிப்போ;
அறிவுள்ள உதடுகளை அங்கே காணமாட்டாய்.
8 தன்னுடைய வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம்;
மூடர்களுடைய வஞ்சனையோ மூடத்தனம்.
9 மூடர்கள் பாவத்தைக்குறித்துப் பரியாசம்செய்கிறார்கள்;
நீதிமான்களுக்குள்ளே தயவு உண்டு.
10 இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்;
அதின் மகிழ்ச்சிக்கு அந்நியன் உடந்தை ஆகமாட்டான்.
11 துன்மார்க்கனுடைய வீடு அழியும்;
செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்.
12 மனிதனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு;
அதின் முடிவோ மரணவழிகள்.
13 சிரிப்பிலும் மனதிற்குத் துக்கமுண்டு;
அந்த மகிழ்ச்சியின் முடிவு சஞ்சலம்.
14 பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன்னுடைய வழிகளிலேயும்,
நல்ல மனிதனோ தன்னிலே தானும் திருப்தியடைவான்.
15 பேதையானவன் எந்த வார்த்தையையும் நம்புவான்;
விவேகியோ தன்னுடைய நடையின்மேல் கவனமாக இருக்கிறான்.
16 ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான்;
மதியீனனோ கடுங்கோபம்கொண்டு துணிகரமாக இருக்கிறான்.
17 முன்கோபி மதிகேட்டைச் செய்வான்;
கெட்டச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்.
18 பேதையர்கள் புத்தியீனத்தைச் சுதந்தரிக்கிறார்கள்;
விவேகிகளோ அறிவினால் முடிசூட்டப்படுகிறார்கள்.
19 தீயோர்கள் நல்லவர்களுக்கு முன்பாகவும், துன்மார்க்கர்கள் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு.
20 தரித்திரன் தன்னைச் சேர்ந்தவனாலும் பகைக்கப்படுகிறான்;
செல்வந்தனுக்கோ அநேக நண்பர்கள் உண்டு.
21 பிறனை அவமதிக்கிறவன் பாவம்செய்கிறான்;
தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்.
22 தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ?
நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமும் உண்டு.
23 எல்லா உழைப்பினாலும் பயனுண்டு;
உதடுகளின் பேச்சோ வறுமையை மட்டும் தரும்.
24 ஞானிகளுக்கு முடி அவர்களுடைய செல்வம்;
மூடர்களின் மதியீனம் மூடத்தனமே.
25 மெய்ச்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களைக் காப்பாற்றுகிறான்;
வஞ்சனைக்காரனோ பொய்களை ஊதுகிறான்.
26 யெகோவாவுக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு;

# உன்னதப்பாட்டு

### ஆசிரியர்

இந்த புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் முதல் வசனத்திலிருந்து தலைப்பு எடுக்கப்பட்டுள்ளது. சாலொமோன் பாடின உன்னதப் பாட்டு. (1:1). இவனுடைய பெயர் இந்த புத்தக முழுவதும் அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது (1:5; 3:7, 9, 11; 8:11-12).

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு. 971 க்கும் 965 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
சாலொமோன் இஸ்ரவேலின் இராஜாவாக இருந்த காலத்தில் இந்த புத்தகம் எழுதப்பட்டது. ஆட்சியின் தொடக்கத்தில் எழுதப்பட்டதாக வேத அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவருடைய காதல் வார்த்தைகளை பார்த்து மாத்திரம் அல்ல, ஆசிரியர் இஸ்ரவேலின் வட தேசத்தையும் தென்தேசத்தையும் லெபனான் எகிப்துவையும் குறிப்பிடுகிறார்.

### யாருக்காக எழுதப்பட்டது

திருமணமானவர்களுக்கும் திருமணத்திற்கு ஆயுத்தமாகி கொண்டிருப்பவர்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

இந்த புத்தகம், திருமணம் தேவனால் உண்டாக்கப்பட்டது காட்டுகிறது. திருமணத்தில் உள்ள காதலை கவிதை நடையில் உயர்த்தி காட்டுகிறான் ஒரு கணவனும் மனைவியும், திருமண உறவில் ஒருவரை ஒருவர் சரீரப்பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும், ஆத்மீக பூர்வமாகவும் காதல் செய்யவேண்டும் என்று கற்பிக்கிறது.

### மையக் கருத்து

காதலும் திருமணமும்

பொருளடக்கம்

1. மணவாட்டி சாலொமோனை குறித்து நினைத்து கொண்டிருக்கிறாள் — 1:1-3:5
2. மணவாட்டி காதல் சம்மதத்தை ஏற்றுக்கொண்டு திருமணத்திற்கு எதிர்ப்பார்த்துக்கொண்டு இருக்கிறாள் — 3:6-5:1
3. மணவாட்டி தன் மணவாளனை இழுந்துவிட்டது போல் கனவு காண்கிறாள். — 5:2-6:3
4. மணவாட்டியும் தன் மணவாளனும் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்ளுகிறார்கள். — 6:4-8:14

## அத்தியாயம் 1

### விருந்து

1 சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு.
*மணவாளி*
2 நீர் உமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவீராக †:
உமது நேசம் திராட்சைரசத்தைவிட இன்பமானது.
3 உமது நறுமணமுள்ள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்;
உமது நாமம் ஊற்றப்பட்ட நறுமணமுள்ள தைலமாக இருக்கிறது;
ஆகையால் இளம்பெண்கள் உம்மை நேசிக்கிறார்கள்.
4 என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்;
ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார்;
நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்;
திராட்சைரசத்தைவிட உமது நேசத்தை நினைப்போம்;
உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்.

---

† *அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக*

5 எருசலேமின் பெண்களே! கேதாரின் † கூடாரங்களைப்போலவும்,
சாலொமோனின் திரைகளைப்போலவும் நான் கறுப்பாக இருந்தாலும்,
அழகாக இருக்கிறேன்.
6 நான் கறுப்பாக இருக்கிறேன் என்று பார்க்காதீர்கள்;
வெயில் என்மேல் பட்டது;
என் சகோதரர்கள் என்மேல் கோபமாயிருந்து,
என்னைத் திராட்சைத் தோட்டங்களுக்குக் †† காவற்காரியாக வைத்தார்கள்;
என் சொந்தத் திராட்சைத்தோட்டத்தையோ நான் காக்கவில்லை.
7 என் ஆத்தும நேசரே! உமது மந்தையை எங்கே மேய்த்து,
அதை மத்தியானத்தில் எங்கே சேர்க்கிறீர்?
எனக்குச் சொல்லும்;
உமது தோழர்களின் மந்தைகளின் அருகே அலைந்து திரிகிறவளைப்போல ‡ நான் இருக்கவேண்டியதென்ன?
*மணவாளன்*
8 பெண்களில் அழகு மிகுந்தவளே!
அதை நீ அறியவில்லையென்றால், மந்தையின் காலடிகளைத் தொடர்ந்துபோய்,
மேய்ப்பர்களுடைய கூடாரங்களுக்கு அருகில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு.
9 என் பிரியமே!
பார்வோனுடைய இரதங்களில் பூட்டப்பட்டிருக்கிற பெண்குதிரைக் கூட்டத்திற்கு உன்னை ஒப்பிடுகிறேன்.
10 அணிகலன்கள் அணிந்த உன் கன்னங்களும்,
ஆரங்கள் அணிந்த உன் கழுத்தும் அழகாக இருக்கிறது.
*மணவாளி*
11 வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன் ஆபரணங்களை உனக்குச் செய்விப்போம்.
12 ராஜா தமது பந்தியிலிருக்கும் ‡†வரை
என்னுடைய நறுமணமுள்ள தைலம் தன் வாசனையை வீசும்.
13 என் நேசர் எனக்கு என் மார்பகங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப்போளச் செண்டு.
14 என் நேசர் எனக்கு எங்கேதி ‡‡ ஊர் திராட்சைத்தோட்டங்களில்
முளைக்கும் மருதாணிப் பூங்கொத்து.
*மணவாளன்*
15 என் பிரியமே! நீ அழகு மிகுந்தவள்;
நீ மிக அழகுள்ளவள்;
உன் கண்கள் புறாக்கண்கள்.
*மணவாளி*16 நீர் ரூபமுள்ளவர்;
என் நேசரே! நீர் இன்பமானவர்;
நம்முடைய படுக்கை பசுமையானது.
17 நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம்,
நம்முடைய வீட்டின் மேல்தளம் தேவதாரு மரம்.

## அத்தியாயம் 2

2 நான் சாரோனின் ‡‡† ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலிமலராக இருக்கிறேன்.
*மணவாளன்*
2 முட்களுக்குள்ளே லீலிமலர் எப்படியிருக்கிறதோ,
அப்படியே இளம்பெண்களுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்.
*மணவாளி*
3 காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ,
அப்படியே இளம் ஆண்களுக்குள்ளே என் நேசர் இருக்கிறார்;
அதின் நிழலிலே ஆர்வமுடன் உட்காருகிறேன்,
அதின் பழம் என் வாய்க்கு இனிப்பாக இருக்கிறது.
4 என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார்;
என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.
5 திராட்சைரசத்தால் என்னைத் தேற்றுங்கள்,

*† கேதார் அராபியர்களில் ஒரு இஸ்மவேல் கோத்திரம். பார்க்க, ஆதி. 25:13, ஏசாயா. 21:16-17, சங்கீதம், 120:5 ஒரு வாலிப பெண்ணின் கறுப்பு நிறத் தோல் †† அதிக பால் உணர்வுள்ள ஒரு வாலிப பெண்ணை குறிக்கலாம் ‡ முக்காடுயிட்ட பெண்ணைப் போல் ‡† மஞ்சத்தில் படுத்திருக்கும் வரை ‡‡ சவக் கடலின் தென்மேற்கு பகுதியில் உள்ள சோலைவனம், இது நீர் ஊற்றுகளால் செழிப்பாக இருந்தது, மனதை குளிர செய்தது. ‡‡† சா-ரோன் ஒரு இடத்தின் பெயர். இஸ்ரவேல் தேசத்தின் மத்திய தரைக்கடல் (ஏசாயா. 35:2, 65:10). இது சமபூமி. இங்கே கிச்சிலி மரங்கள் அடர்த்தியாக இருந்தன.*

# ஏசாயா

### ஆசிரியர்

ஏசாயா புத்தகத்தின் பெயர், ஆசிரியர் ஏசாயா என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவர் ஒரு தீர்க்கதரிசினியை மணந்தவர். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தன. (ஏசாயா 7:3; 8:3). ஏசாயா யூதா தேசத்தின் இராஜாக்களாகிய, உசியா, யோதாம், ஆகாஸ் எசேக்கியா என்பவர்களின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தவன். ஏசாயா 1:1; பொல்லாத இராஜவாகிய மனாசேயின் ஆட்சியில் மரணத்தை அடைந்ததாக கருதப்படுகிறது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்:

ஏறக்குறைய கிமு 740 க்கும் 680 கிமுக்கும். இடையில் எழுதப்பட்டது.
உசியா இராஜாவின் கடைசி நாட்களிலிலும் யோதாம், ஆகாஸ் எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும் எழுதப்பட்டதாக எண்ணப்படுகிறது.

### யாருக்காக எழுதப்பட்டது?

முதலாவதாக தேவனின் கட்டளைக்கு கீழ்படியாத யூத தேசத்தின் ஜனங்களுக்கும் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள்.

### எழுதப்பட்ட நோக்கம்:

பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி விரிவான காரியங்கள் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையின் நோக்கம் (ஏசாயா. 40:3-5), அவருடைய கன்னிப்பிறப்பு (7:14), அவர் நற்செய்தியை பிரசங்கித்தல் (61:1), அவருடைய பலியான மரணம் (52:13-53:12) தன் ஜனங்களை தம்மிடம் சேர்த்துக் கொள்ள திரும்ப வருதல். (60:2-3). ஆகியவைகளாகும். முக்கியமாக யூதா தேசத்தின் மக்களுக்கு தீர்க்கத்தரிசனம் சொல்ல அழைக்கப்பட்டவன். யூத தேசத்தில் எழுப்புதல்களும் கீழ்படியமைகளும் நடந்துக்கொண்டு இருந்தன. யூத தேசத்திற்கு அசீரிய தேசத்திலிருந்தும் எகிப்து தேசத்திலிருந்தும் அழிவுக்கான பயமுறுத்தல்கள் வந்துகொண்டிருந்ததது ஆனால் தேவனுடைய இரக்கத்தால் காக்கப்பட்டார்கள் ஏசாயா, பாவத்திலிருந்து மனம்திரும்பும் செய்திகளையும், வருங்காலத்தில் தேவனுடைய விடுதலைக்காக நம்பிக்கையோடு எதிர்ப்பார்க்கும் செய்திகளையும் அறிவித்தான்.

### மையக் கருத்து:

இரட்சிப்பு

பொருளடக்கம்:

1. யூத தேசத்திற்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள் — 1:1-12:6
2. பிற நாடுகளுக்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள் — 13:1-23:18
3. வருங்கால உபத்திரவங்கள் — 24:1-27:13
4. இஸ்ரவேல், யூத தேசங்களுக்கு விரோதமான தீர்க்கதரிசனங்கள் — 28:1-35:10
5. எசேக்கியா, ஏசாயாவின் சரித்திரம். — 36:1-38:22
6. பாபிலோனின் காரியங்கள் — 39:1-47:15
7. தேவ திட்டமான சமாதான அறிவிப்புகள். — 48:1-66:24

### அத்தியாயம் 1

1 ஆமோத்சின் மகனாகிய ஏசாயா, யூதாவின் ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் ஆட்சியின் காலங்களில், யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட காட்சி.

### கலகக்கார தேசம்

2 வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; யெகோவா பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்;
அவர்களோ எனக்கு விரோதமாகக் கலகம்செய்தார்கள். 3 மாடு தன் எஜமானையும், கழுதை, தான் உணவு உண்ணும்
இடத்தையும் அறியும்; இஸ்ரவேலர்களோ அறிவில்லாமலும், என் மக்கள் உணர்வில்லாமலும் இருக்கிறார்கள் என்கி-
றார். 4 ஐயோ, பாவமுள்ள தேசமும், அக்கிரமத்தால் பாரம்சுமந்த மக்களும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு

# எரேமியா

### ஆசிரியர்

எரேமியாவும் அவனுடைய உதவியாளன் பாருக்கும் எழுதினார்கள். இல்கியாவின் குமாரன் எரேமியா ஆசாரியானகவும் தீர்க்த்தரிசியாகவும் சேவை செய்தான். சிறிய ஊரான ஆனதோத்திலிருந்து வந்தவன். (1:1). பாருக் இவனுக்கு உதவியாளனாக இருந்து எரேமியா சொன்ன தீர்க்கதரிசனங்களை எழுதி, தொகுத்து பத்திரப்படுத்தினான். (36:4, 32; 45:1). அழுகிற தீர்க்கதரிசி என்று அறியப்பட்டிருந்தான். (பார்க்க. எரேமி. 9:1; 13:17; 14:17).

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்:

ஏறக்குறைய கிமு. 626 க்கும் 570 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
இந்த புத்தகம் பாபிலோனின் சிறையிருப்பில் எழுதி முடிக்கப்பட்டது. சிலர் அதன் பிறகு முடித்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

### யாருக்காக எழுதப்பட்டது?

யூதா, மக்களுக்கும், எருசலேமின் ஜனங்களுக்கும், பின்பு வேதத்தை வாசிக்கிற மக்கள் அனைவருக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்:

பூமியில் இயேசுகிறிஸ்து வந்தபிறகு, தேவன் தம்முடைய மக்களோடு புதிய உடன்படிக்கையை செய்வேன் என்பதை தெளிவாக கட்டுகிறான். புதிய உடன்படிக்கை, தேவ மக்களை, தம்மோடு மறுபடியுமாக சேர்த்துக்கொள்ளும் காரியமாகும். அதை அவர் கல்லின்மேல் அல்ல, இருதயத்தின் மேல் எழுதுகிறார், யூதா தேசம் மனம்திரும்பாவிட்டால், அழிவு வரும் என்று எரேமியா பதிவு செய்கிறான். தேசம் தேவனிடம் திரும்பும்படி அழைக்கிறான். யூத தேசத்தின், மனம்மாறாத, விக்கிரகாரியங்களினிமித்தமும் விபச்சாரத்தினிமித்தம் அதின் மேல் தவிர்க்கமுடியாத அழிவு வருவதை அறிந்திருந்தான்.

### மையக் கருத்து:

நியாயத்தீர்ப்பு

பொருளடக்கம்:

1. எரேமியாவின் தேவ அழைப்பு — 1:1-19
2. யூதாவுக்கு எச்சரிப்பு — 2:1-35:19
3. எரேமியாவின் பாடுகள் — 36:1-38:28
4. எருசலேமின் வீழ்ச்சியும் அதின் விளைவும் — 39:1-45:5
5. மற்ற தேசங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் — 46:1-51:64
6. சரித்திர பின்சேர்க்கை — 52:1-34

### அத்தியாயம் 1

1 பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் மகன் எரேமி-
யாவினுடைய வசனங்கள்: 2 ஆமோனுடைய மகனாகிய யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில்,
அவன் அரசாண்ட பதின்மூன்றாம் வருடத்தில் எரேமியாவுக்குக் யெகோவாவுடைய வார்த்தை உண்டானது. 3 அப்புறம்
யோசியாவின் மகனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் அரசாட்சியின் நாட்களிலும், யோசியாவின்
மகனாகிய சிதேக்கியா என்கிற யூதாவுடைய ராஜாவின் பதினோராம் வருடத்து முடிவுவரையும், எருசலேம் ஊரார் ஐந்-
தாம் மாதத்தில் சிறைப்பட்டுப் போகும்வரைக்கும் யெகோவாவுடைய வார்த்தை அவனுக்கு உண்டானது.

### எரேமியாவின் அழைப்பு

4 யெகோவாவுடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: 5 நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குவதற்கு
முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்செய்து, உன்னை

# புலம்பல்கள்

### ஆசிரியர்

இந்த புத்தகத்தில் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. யூத பாரம்பரியமும் கிறிஸ்துவ பாரம்பரியமும் எரேமியா தான் இதன் ஆசிரியர் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆசிரியர் எருசலேமுக்கு விரோதமான படையெடுப்பையும் அதின் அழிவையும் தன் கண்களால் கண்டு துன்பங்களை அனுபவித்தவன். யூதஜனங்கள் தேவனுக்கு விரோதமாக கிரியை செய்து, உடன்படிக்கையை மீறினார்கள். பாபிலோனியர்களை, யூதாவை தண்டிக்க தேவன் உபயோகித்துக் கொண்டார். பாடுகள் மத்தியிலும் மூன்றாம் அதிகாரம் நம்பிக்கையை வாக்களிக்கிறது. எரேமியா தேவனுடைய நன்மைகளை நினைக்கிறான். இந்த புத்தகத்தை வாசிக்கிறவர்களுக்கு தேவனுடைய நன்மைகளையும் அவருடைய மாறாத அன்பையும் சொல்லி ஆறுதல்படுத்துகிறான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 586 க்கும் 584 கிமு க்கும். இடையில் எழுதப்பட்டது.
பாபிலோனியர்கள் எருசலேமை பட்டணத்தை சூழ்ந்து படையெடுத்து தாக்கி அழித்ததை தன் கண்களால் கண்ட காட்சியை, எரேமியா எழுதுகிறான்.

### யாருக்காக எழுதப்பட்டது

சிறையிருப்பில் மீந்தவர்களுக்கும் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பிவந்தவர்களுக்கும் வேதத்தை வாசிக்கிற எல்லோருக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தனிப்பட்ட நபர் பாவம் செய்தாலும் தேசம் செய்தாலும் அதின் விளைவு உண்டு. தேவன், ஜனங்களையும் சூழ்நிலைகளையும் தம்மை பின்பற்றினவர்களை தம்மிடம் கொண்டுவர உபயோகப்படுத்துகிறார். நம்முடைய நம்பிக்கை தேவனில் இருக்கிறது. தேவன் தமக்காக மீதியானவர்களை யூதர்களின் சிறையிருப்பில் பாதுகாத்து வந்தார். அதேபோல் அவருடைய குமாரினில் ஒரு இரட்சகரைக் கொடுத்திருக்கிறார். பாவம் நித்திய மரணத்தை கொண்டுவருகிறது ஆனால் தேவன் தன் இரட்சிப்பின் திட்டத்தின் மூலமாக நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். பாவமும் முரட்டாட்டுமும் தேவனிடத்திலிருந்து கோபாக்கினியை கொண்டுவருகிறது என்று இந்த புத்தகம் தெளிவாக காட்டுகிறது. 1:8-9; 4:13; 5:16.

### மையக் கருத்து

புலம்பல்

பொருளடக்கம்

1 எரேமியா எருசலேமுக்காக வேதனை அனுபவிக்கிறார் — 1:1-22
2 பாவம் தேவனுடைய கோபத்தை கொண்டுவருகிறது. — 2:1-22
3 தேவன் தம்முடைய ஜனத்தை எப்போதும் கைவிடுவதில்லை. — 3:1-66
4 எருசலேம் தன்னுடைய மகிமையை இழந்துவிட்டது. — 4:1-22
5 எரேமியா தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் செய்கிறார். — 5:1-22

## அத்தியாயம் 1

### எருசலேமின் துன்பம்

1 2 ஐயோ, மக்கள் மிகுந்த நகரம் [†] தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே!
விதவைக்கு ஒப்பானாளே! தேசங்களில் பெரியவளும்,
அந்த தேசங்களில் இளவரசியுமாயிருந்தவள் வரிகட்டுகிறவளானாளே!
2 இரவுநேரத்திலே அழுதுகொண்டிருக்கிறாள்;

† *எருசலேம்*

14 முதியோர்கள் வாசல்களில் உட்காருகிறதும்,
வாலிபர்கள் கின்னரங்களை வாசிக்கிறதும் நின்றுபோனது.
15 எங்கள் இருதயத்தின் மகிழ்ச்சி ஒழிந்துபோனது;
எங்கள் சந்தோஷம் துக்கமாக மாறினது.
16 எங்கள் தலையிலிருந்து கிரீடம் விழுந்தது; ஐயோ, நாங்கள் பாவம்செய்தோமே.
17 அதினால் எங்கள் இருதயம் பலவீனமானது;
அதினால் எங்களுடைய கண்கள் இருண்டுபோயின.
18 பயனற்றுக்கிடக்கிற சீயோன் மலையின்மேல் நரிகள் ஓடித்திரிகிறது.
19 யெகோவாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர்;
உம்முடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும்.
20 தேவரீர் என்றைக்கும் எங்களை மறந்து, நீண்ட நாட்களாக எங்களைக் கைவிட்டிருப்பது என்ன?
21 யெகோவாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம்;
ஆரம்பநாட்களிலிருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும்.
22 எங்களை முற்றிலும் வெறுத்துவிடுவீரோ?
எங்கள்மேல் கடுங்கோபமாக இருக்கிறீரே!

# ஓசியா

### ஆசிரியர்

இந்த புத்தகத்தின் அதிக பகுதிகள் ஓசியாவினால் பேசப்பட்டவைகள். தானே எழுதினானோ, அல்லது மற்றவர்கள் அவன் சொன்ன கர்த்தருடைய வசனங்களை கேட்டு தொகுக்கப்பட்டு, எழுதினார்களோ என்று தெரியவில்லை. இந்த தீர்க்கதரிசியின் பெயரின் அர்த்தம் “இரட்சிப்பு” தன்னுடைய வாழ்க்கையோடு தன் செய்திகளை இணைக்கிறான். இந்த பெண் துரோகம் செய்வாள் என்று தெரிந்தும் திருமணம் செய்துகொண்டு, மகன்களை பெற்று, அவர்களுக்கு பெயரும் தீர்க்கதரிசன அர்த்தத்துடன் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்று வைத்து, செய்தி அளித்து தன் வாழ்க்கையை இணைக்கிறான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு. 750 க்கும் 710 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
ஓசியாவின் செய்திகள் சேர்க்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, பிரதிகள் எடுக்கப்பட்டது. இந்த காரியங்கள் எப்பொழுது நடந்தது என்று சரியாக தெரியாவிட்டாலும், எருசலேமின் அழிவுக்குமுன் எழுதப்பட்டது என்று நிச்சயிக்கப்படுகிறது.

### யாருக்காக எழுதப்பட்டது

விஷேசமாக இந்த புத்தகம் இஸ்ரவேலின் வட இராஜ்ஜியத்திற்கு எழுதப்பட்டது. அவர்கள் சிறைப்பட்டு போனப்பிறகு, இந்த புத்தகம் எச்சரிப்புக்காகவும், மக்கள் மனம்திரும்பி ஆண்டவரிடம் மறுபடியும் திரும்பக் காக்கப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவனுக்கு, இஸ்ரவேல் மக்களும், நாமும் உண்மையாயிருக்கவேண்டும் என்று ஓசியா ஞாபகப்படுத்துகிறான். யெகோவா தான் ஒரே மெய்யான தேவன். முழு இருதயத்தோடு அவரைப் பின்பற்ற தான் விரும்புகிறார். பாவம் நியயாத்தீர்ப்பின் அழிவைக் கொண்டுவரும். எதிரி சேனையினால் உண்டாகும் அடிமைத்தனத்தின் வேதனைகளை எச்சரித்தான். தேவன் மனிதனைப் போல் வாக்குகளை மீறுகிறவர் அல்ல. இஸ்ரவேலர்கள் பாவம் செய்திருந்தும் தேவன் அவர்களை தொடர்ந்து அன்புகூர்ந்தார், மறுபடியும் தம்மிடம் சேர்த்துக்கொள்ள வழி செய்தார். இஸ்ரவேலர்கள் விக்கிர ஆராதனை செய்து, பாவத்திற்கும், தண்டனைக்கும் தகுதியாயிருந்தலும், அன்பினிமித்தம் மன்னித்தார், அதற்கு உவமையாக, ஓசியாவை கோமர் என்ற சோரம்போகும் பெண்ணை திருமணம் செய்து காட்டினான்.

### மையக் கருத்து

சோரம்போகுதல்
பொருளடக்கம்
1 ஓசியாவின் உண்மையில்லாத மனைவி. — 1:1-11
2 இஸ்ரவேலின் மீது வரும் நியாயத்தீர்ப்பும், தண்டனைகளும். — 2:1-23
3 தேவன் தமது மக்களை மீட்டார். — 3:1-5
4 இஸ்ரவேல் சோரம்போனதால் ஏற்பட்ட தண்டனை — 4:1-10:15
5 இஸ்ரவேலின் மீது, தேவனின் அன்பு. — 11:1-14:9

## அத்தியாயம் 1

1 யூதா தேசத்து ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும், யோவாசின் மகனாகிய யெஸ்ரயேலின் ராஜாவாகிய யெரொபெயாம் என்பவனின் நாட்களிலும், பெயேரியின் மகனாகிய ஓசியாவிற்கு கிடைத்த யெகோவாவுடைய வசனம்.

### ஓசியாவின் மனைவியும் பிள்ளைகளும்

2 யெகோவா ஓசியாவைக்கொண்டு சொல்லத் தொடங்கினபோது, யெகோவா ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு விபச்சாரியையும் அவளுடைய பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள்; தேசம் யெகோவாவைவிட்டு விலகி
கெட்டுப்போனது என்றார்.
3 அவன் போய், திப்லாயிமின் மகளாகிய கோமேரைச் சேர்த்துக்கொண்டான்; அவள் கர்ப்ப-

# யோவேல்

### ஆசிரியர்

யோவேல் தான் இதன் ஆசிரியர் என்று இந்த புத்தகத்தில் எழிதியுள்ளது (யோவேல் 1:1). இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டக் காரியத்தை தவிர வேறு காரியங்கள் இந்த தீர்க்கதரிசியைக் குறித்து அதிகமாக அறியப்படவில்லை. பெத்துவேலின் குமாரன் என்று தன்னை அறியப்படுத்துகிறான், யூத ஜனங்களுக்கு பிரசங்கித்தான், எருசலேமைக்குறித்து அதிகமாக சொல்லுகிறான். யூதாவில் உள்ள ஆலயத்தின் காரியங்களைக்குறித்தும் ஆசாரியர்களைக் குறித்தும், அதிகம் அறிந்தவனாக இருந்தான். (யோவேல் 1:13-14; 2:14, 17).

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 835 க்கும் 600 க்கும். இடையில் எழுதப்பட்டது.
பெர்சியா சாம்ராஜ்ஜியத்தின் காலத்தில் வாழ்ந்தவன் என்று கருதப்படுகிறது. பெர்சியரின் காலத்தில் சில யூதர்கள் எருசலேமுக்கு திரும்பிவர அனுமதிக்கப்பட்டார்கள், அவர்கள் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினார்கள். யோவேல் ஆலயக்காரியத்தைக் குறித்து நான்கு அறிந்தவனாய் இருந்தான்.
ஆகையால் இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பிறகு எழுதப்பட்டு இருக்கலாம்.

### யாருக்காக எழுதப்பட்டது

இஸ்ரவேலர்களுக்கும் வேதத்தை வாசிப்பவர்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவன் இரக்கம் உள்ளவர், மனம்திரும்பினவர்களுக்கு தேவன் மன்னிப்பு அளிக்கிறார் இரண்டு காரியங்களை சிறப்பம்சங்களாக இந்த புத்தகம் வர்ணிக்கிறது. ஒன்று வெட்டுகிளிகளின் படையெடுப்பும், இரண்டு பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலும் ஆகும். இதின் நிறைவேறுதல் அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது.

### மையக் கருத்து

கர்த்தருடைய நாள்

பொருளடக்கம்

1. இஸ்ரவேல் வெட்டுகிளிகளால் சூழப்பட்டது — 1:1-20
2. தேவனின் தண்டனை — 2:1-17
3. இஸ்ரவேல் மறுபடியும் நாட்டப்பட்டது — 2:18-32
4. இஸ்ரவேல் மக்கள் வாழ்ந்த தேசங்களின் நியாயத்தீர்ப்பு — 3:1-21

## அத்தியாயம் 1

### யோவேலுக்கு கொடுக்கப்பட்ட யெகோவாவுடைய வசனம்

1 பெத்துவேலின் மகனாகிய யோவேலுக்கு கொடுக்கப்பட்ட யெகோவாவுடைய வசனம். 2 முதியோர்களே, இதைக்
கேளுங்கள்; தேசத்தின் அனைத்துக் குடிமக்களே, செவிகொடுங்கள்; உங்கள் நாட்களிலாவது உங்கள் முன்னோர்க-
ளின் நாட்களிலாவது இப்படிப்பட்டது சம்பவித்ததுண்டா? 3 இந்தச் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவியுங்-
கள்; இதை உங்களுடைய பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் சந்ததியாருக்கும்
தெரிவிப்பார்களாக. 4 பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது;
பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது. 5 மது வெறியர்களே, விழித்து அழுங்கள்; திராட்சைரசம் குடிக்கிற
அனைத்து மக்களே, புது திராட்சைரசத்திற்காக அலறுங்கள்; அது உங்கள் வாயிலிருந்து அகற்றப்பட்டது. 6 எண்ணிமுடி-
யாத ஒரு பெரும் மக்கள்கூட்டம் † என் தேசத்தின்மேல் வருகிறது; அதின் பற்கள் சிங்கத்தின் பற்கள்; கொடிய சிங்கத்-

† *வெட்டுக்கிளி சேனை*

# மீகா

### ஆசிரியர்

இந்த புத்தகத்தின் ஆசிரியர் தீர்க்கதரிசியான மீகா. (மீகா 1:1). மீகா ஒரு கிராமத்து தீர்க்கதரிசி, சமுதாயத்திலும் நடக்கும் விக்கிர ஆராதனைக்கும், அநியாயத்திற்கும், வரப்போகும் தேவனுடைய கோபாக்கினியை தெரியப்படுத்த, பட்டணத்திற்கு அனுப்பப்பட்டவன். மீகா விவசாயம் செய்யும் ஊர்களில் வசித்தவன், தேசத்தின் அரசாங்க அதிகாரத்துக்கு தூரமாயிருந்தான். தள்ளுண்டவர்கள்மீதும் அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் மீதும் கரிசனைக் கொண்டிருந்தான். (மீகா 4:6). இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் குறித்தும் அவருடைய நித்திய குணங்களைக் குறித்தும், பிறக்கும் ஊரான பெத்லேகேமைக் குறித்தும் பழைய ஏற்பாட்டில் 700 வருடங்களுக்கு முன்பாக எழுதியிருக்கிறான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 730 க்கும் 650 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது. இஸ்ரவேலின் வட ராஜ்ஜியம் வீழ்ச்சியடைமுன் முதல் வார்த்தைகள் எழுதப்பட்டது. (1:2-7).
அடுத்த பகுதிகள் பாபிலோனின் சிறையிருப்பின் போதும், சில பகுதிகள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பிறகும் எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

வட தேசமான இஸ்ரவேல் தேசத்திற்கும், தென்தேசமான யூதாவுக்கும் எழிதினான்.

### எழுதப்பட்ட நோக்கம்

இஸ்ரவேல், யூதா தேசங்களின் மீதும் வரும் நியயத்தீர்ப்பையும், ஆயிரவருட அரசாட்சியில் தேவ ஜனங்கள் மறுபடியும் திரும்ப இஸ்ரவேல் தேசத்தில் நாட்டப்படுவார்கள் என்ற இரண்டு காரியத்தை அதிகமாக மீகா எழுதியிருக்கிறான். ஜனங்கள் சுயநலமாக வாழ்ந்தபோதும் அவர்களுக்காக தேவன் செய்த நன்மைகளை தேவன் ஞாபகப்படுத்தினார்.

### மையக் கருத்து

தேவனின் நியாயத் தீர்ப்பு

பொருளடக்கம்

1. நியாயத்தீர்ப்பு செய்ய தேவன் வருகிறார் — 1:1-2:13
2. அழிவின் செய்திகள் — 3:1-5:15
3. கண்டனக் குரலின் செய்திகள் — 6:1-7:10
4. முடிவுரை — 7:11-20

## அத்தியாயம் 1

1 யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா ராஜாக்களுடைய நாட்களில், மொரேசா ஊரைச்சேர்ந்த மீகாவுக்கு
உண்டானதும், அவன் சமாரியாவிற்கும் எருசலேமிற்கும் விரோதமாகப் பெற்றுக்கொண்டதுமான யெகோவாவு-
டைய வார்த்தை.

### இஸ்ரவேலின்மேல் வரப்போகும் நியாயத்தீர்ப்பு

2 அனைத்து மக்களே, கேளுங்கள்; பூமியே, அதிலுள்ளவைகளே, செவிகொடுங்கள்; யெகோவாகிய ஆண்டவர், தம்-
முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாக இருப்பார். 3 இதோ, யெகோ-
வா தம்முடைய இடத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கி பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார். 4 மெழு-
கு நெருப்பிற்கு முன்பாக உருகுகிறதுபோலவும், மலைகளிலிருந்து பாயும்தண்ணீர் தரையைப் பிளக்கிறதுபோலவும்,
மலைகள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும். 5 இவை அனைத்தும் யாக்கோபுடைய மீறுதலின் கார-
ணமாகவும், இஸ்ரவேல் வம்சத்தார்களுடைய பாவங்களின் காரணமாகவும் சம்பவிக்கும்; யாக்கோபின் மீறுதலுக்குக்
காரணமென்ன? சமாரியா அல்லவோ? யூதாவின் மேடைகளுக்குக் காரணமென்ன? எருசலேம் அல்லவோ? 6 ஆகை-
யால் நான் சமாரியாவை வெளியான மண்மேடும், திராட்சைச்செடி நடுகிற நிலமுமாக்கி, அதின் கற்களைப் பள்ளத்தாக்-

# நாகூம்

### ஆசிரியர்

நாகூமின் ஆசிரியர் நாகூம் என்று 1:1 ல் கூறப்பட்டுள்ளது. நாகூம் என்பதற்கு தேற்றரவாளன் என்று அர்த்தம். அசீரியா ராஜ்ஜியத்தின் நினிவே பட்டணத்து மக்கள் மனம்திரும்பும்படி அழைக்கிறான். 150 வருடங்களுக்கு முன்பு யோனாவின் செய்தியினால் நினிவே மக்கள் மனம்திரும்பினார்கள். இப்பொழுதோ மறுபடியும் விக்கிரகராதனைக்கு போய்விட்டார்கள்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கி. 620 க்கும் 612 கிமு. க்கும். இடையில் எழுதப்பட்டது.
இரண்டு சரித்திர நிகழ்ச்சிகள், நினிவேயின் வீழ்ச்சி, மற்றும் தேபெஸின் வீழ்ச்சியின் மத்தியில் நாகூம் புத்தகம் எழுதப்பட்டதால், இதின் காலம் சுலபமாக கண்டுப்பிடிக்கப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

அசீரியர், இஸ்ரவேலின் பத்து வடஇராஜ்ஜியங்களில் உள்ள கோத்திரங்களை சிறைப்பிடித்து போய் விட்டவர்களுக்கும், இதே மாதிரி நமக்கும் நடக்கலாம் என்று பயந்திருந்த தென்ராஜ்ஜிய யூதா மக்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவனுடைய நியாயம் சரியானது, நிச்சயமானது. தேவன் தயவு காட்டினாலும் தன்னுடைய நீதி நியாயத்தை புரட்டமாட்டார். இந்த தீய பாதையிலேப் போனால் என்ன அழிவு வரும் என்று 150 வருடங்களுக்கு முன்னரே, யோனா தீர்க்கதரிசி மூலமாக எச்சரிக்கப்பட்டார்கள். யோனாக் காலத்து நினிவே மக்கள் மனம் திரும்பினார்கள், இன்றோ என்னும் அதிகமாக தீமை செய்கிறார்கள். அசீரியர்கள் தாங்கள் அடைந்த வெற்றிகளினிமித்தம் மூர்க்கவெறியர்களாகி விட்டனர். ஆகையால், தேவன் அவர்களை நியாயம் விசாரிக்கபோவதால், யூதா மக்கள் சோர்ந்து போகவேண்டாம் என்று சொல்லுகிறான்.

### மையக் கருத்து.

ஆறுதல்.

பொருளடக்கம்

1 தேவனின் மகிமை — 1:1-14
2 நினிவே மேல் வரும் தேவனின் நியாயத்தீர்ப்பு. — 1:15-3:19

## அத்தியாயம் 1

### தம்முடைய எதிரிகளின்மேல் தேவனுடைய கோபம்

1 நினிவே பட்டணத்தைக் குறித்த எல்கோசானாகிய நாகூமின் தரிசனப் புத்தகம். 2 யெகோவா எரிச்சலுள்ளவரும் நீ-
தியை நிலைநாட்டுகிறவருமான தேவன்; யெகோவா நீதிசெய்கிறவர், கடுங்கோபமுள்ளவர்; யெகோவா தம்mு-
டைய எதிரிகளுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர். அவர் தம்முடைய பகைவர்கள்மேல் என்றும் கோபம் வைக்கிறவர்.
3 யெகோவா நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களைத் தண்டனையில்லாமல் தப்புவிக்கமாட்டார்;
யெகோவாவுடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்திலுள்ள தூசி-
யாயிருக்கிறது. 4 அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகச்செய்து, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார்;
பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும். 5 அவர் சமுகத்தில் மலைகள் அதிர்ந்து கரைந்து-
போகும்; அவர் பிரசன்னத்தினால் உலகமும் பூமியும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போகும். 6 அவ-
ருடைய கோபத்திற்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய கடுங்கோபத்திலே நிலைநிற்பவன் யார்? அவருடைய
எரிச்சல் நெருப்பைப்போல இறைக்கப்படுகிறது; அவராலே கன்மலைகள் பெயர்க்கப்படும். 7 யெகோவா நல்லவர்,
இக்கட்டு நாளிலே பாதுகாப்பான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். 8 ஆனாலும் நினிவேயின் நி-
லையை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் முற்றிலுமாக அழிப்பார்; இருள் அவருடைய எதிரிகளைப் பின்தொடரும்.

# சகரியா

### ஆசிரியர்

இதன் ஆசிரியர் இத்தோவின் மகனான பொகியாவின் குமாரனாகிய சகரியா என்று 1:1 ல் குறிப்பிடுகிறது. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த ஆசாரிய குடும்பங்களில் இத்தோ ஒரு தலைவனாக இருந்தான் என்று நெகேமியா 12:4, 16 ல் குறிப்பிடுகிறது. எருசலேமுக்கு திரும்பி வந்தபோது சகரியா ஒரு பையனாக இருந்திருப்பான். குடும்ப வம்ச பிரகாரமாக இவன் ஆசாரியனாகவும் தேவ அழைப்பினால் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்தான். ஆலயத்தில் ஊழியம் செய்யாவிட்டாலும், யூதர்களின் ஆராதனை காரியங்களை நன்கு அறிந்தவனாக இருந்தான்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிமு 520 க்கும் 480 கிமுக்கும். இடையில் எழுதப்பட்டது.
சிறையிருப்பிலிருந்து வந்த பிறகு எழுதப்பட்டது. 1-8 அதிகாரங்கள் ஆலயம் கட்டப்படுமுன் எழுதப்பட்டது. 9-14 அதிகாரங்கள் ஆலயம் கட்டப்பட்டப் பிறகு எழுதப்பட்டது.

### யாருக்காக எழுதப்பட்டது

எருசலேமில் வாழ்ந்த ஜனங்களுக்கும் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

மீதியானவர்களுக்கு, நம்பிக்கை தரவும், மேசியாவாகிய இயேசுவின் வருகைக்கும் எதிர்ப்பார்த்திருக்கவும் எழுதப்பட்டது. தேவன் தம் ஜனங்களை, தீர்க்கதரிசிகள் மூலமாக எச்சரிக்கவும், திருத்தவும் உபயோகித்துக் கொள்கிறார் ஆனால், ஜனங்கள் செவிகொடுக்கவில்லை அவர்களுடைய பாவம் தேவனுடைய தண்டனையை கொண்டுவந்தது. பொய் தீர்க்கத்தரிசனத்தைக் குறித்தும் எழுதியிருக்கிறது.

### மையக் கருத்து

தேவனுடைய விடுதலை

பொருளடக்கம்

1 மனம்திரும்ப அழைத்தல் — 1:1-6
2 சகரியாவின் தரிசனங்கள் — 1:7-6:15
3 உபவாசத்தைக்குறித்த கேள்விகள் — 7:1-8:23
4 வருங்காலத்தைக் குறித்த பாரங்கள் — 9:1-14:21

## அத்தியாயம் 1

### மனம்திரும்ப அழைப்பு

1 தரியு † அரசாண்ட இரண்டாம் வருடம் எட்டாம் மாதத்திலே இத்தோவின் மகனான பெரகியாவின் மகனாகிய சகரியாவுக்கு உண்டான யெகோவாவுடைய வார்த்தை: 2 யெகோவா உங்கள் முன்னோர்களின்மேல் கடுங்கோபமா-
யிருந்தார். 3 ஆகையால் நீ அவர்களை நோக்கி: சேனைகளின் யெகோவா உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில்
திரும்புங்கள் என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார்; அப்பொழுது நான் உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்-
று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார். 4 உங்கள் முன்னோர்களைப்போல் இருக்காதீர்கள்; முந்தின தீர்க்கதரிசிகள்
அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழிகளையும், உங்கள் பொல்லாத செயல்களையும்விட்டுத் திரும்புங்கள்
என்று சேனைகளின் யெகோவா சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள்; ஆனாலும் எனக்குச் செவிகொடுக்காமலும் என்-
னைக் கவனிக்காமலும் போனார்கள் என்று யெகோவா சொல்லுகிறார். 5 உங்கள் முன்னோர்கள் எங்கே? தீர்க்கதரிசிகள்
என்றென்றைக்கும் உயிரோடிருப்பார்களோ? 6 இல்லாமற்போனாலும், தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரர்களுக்கு
நான் கட்டளையிட்ட என் வார்த்தைகளும் என் தீர்மானங்களும் உங்கள் முன்னோர்களிடத்தில் பலிக்கவில்லையோ?

† *தரியு, தரியு ஹிஸ்டாபேஸ், பெர்சிய ராஜ்ஜியத்தின் மேல் கிமு. 522 லிருந்து 486 கிமு. வரை அரசாண்டான். பெர்சிய மொழியில் அவன் பெயர் தாரா என்று அழைக்கப்பட்டது*

# மல்கியா

### ஆசிரியர்

மல்கியா 1:1 ன்படி தீர்க்கதரிசி மல்கியா தான் இதன் ஆசிரியர் என்று உறுதியாகிறது. எபிரேய மொழியில் இதன் அர்த்தம், "தூதன்", தேவனுடைய செய்தியை தேவஜனங்களுக்கு தரும்படியான ஊழியத்தை செய்கிறான் என்பதை காட்டுகிறது. இரண்டு விதத்தில் "மல்கியா" இந்த புத்தகத்தில் தூது சொல்கிறான், அது என்னவென்றால், வரும் தேவனுடைய நாளில், திரும்ப பெரிய தீர்க்கதரிசியான எலியாவை பூமிக்கு அனுப்புவேன் என்பதாகும்.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்.

ஏறக்குறைய கிமு 430 ல் எழுதப்பட்டது.
இது பாபிலோன் சிறையிருப்புக்கு பிறகு எழுதப்பட்ட புத்தகமாகும்.

### யாருக்காக எழுதப்பட்டது.

எருசலேமில் வாழ்ந்துகொண்டிருந்த யூதர்களுக்கும் எங்குமுள்ள தேவ ஜனங்களுக்கும் எழுதப்பட்டது.

### எழுதப்பட்ட நோக்கம்

தேவன் ஜனங்களுக்கு உதவி செய்கிறார், ஜனங்கள் செய்கிற தீமையானக் காரியங்களுக்கு தாம் நியாயாதிபதியாக வரும்போது கணக்கு தரவேண்டும், என்பதை ஞாபகப்படுத்தவும், உடன்படிக்கையயின் ஆசிர்வாதங்களை பெற்றுக்கொள்ள தீமையானக் காரியங்களை விட்டு மனத்திரும்பவேண்டும் என்று ஞாபகப்படுத்துகிறான். தேவனிடம் திரும்பும்படியாக தேவன் மல்கியா மூலமாக எச்சரிக்கிறார். பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாக, தேவனுடைய நியாயத்தையும், மேசியா வருகையின் மூலம், ஜனங்கள் திரும்ப நாட்டபடுவார்கள் என்ற வாக்குதத்தமும் இஸ்ரவேலர்களின் காதுகளில் தொனித்துக் கொண்டிருந்தது.

### மையக் கருத்து

நடைமுறைக் காரியங்கள் கண்டிக்கப்பட்டது.

பொருளடக்கம்

1 ஆசாரியர்கள் தேவனை கனப்படுத்த அறிவுறுத்தப்பட்டார்கள் — 1:1-2:9
2. யூத ஜனங்கள் உண்மையாயிருக்க அறிவுறுத்தப்பட்டார்கள் — 2:10-3:6
3. யூதர்கள் தேவனிடம் திரும்ப வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டார்கள் — 3:7-4:6

## அத்தியாயம் 1

### தேவனால் நேசிக்கப்பட்ட இஸ்ரவேல்

1 மல்கியாவைக்கொண்டு யெகோவா இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் செய்தி. [2] நான் உங்களைச் சிநேகித்-
தேன் என்று யெகோவா சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; யெகோவா
சொல்லுகிறார்: ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆனாலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். [3] ஏசாவை-
யோ நான் வெறுத்தேன் †; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய பங்கை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்க-
ளின் இருப்பிடமாக்கினேன். [4] ஏதோமியர்கள் ††: நாம் ஒடுக்கப்பட்டோம்: ஆனாலும் பாழானவைகளைத் திரும்பக் கட்-
டுவோம் என்று சொல்லுகிறார்கள்; அதற்குக் யெகோவா: அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன், அவர்கள் துன்-
மார்க்கத்தின் எல்லையென்றும், என்றைக்கும் யெகோவாவுடைய கோபத்திற்குள்ளான மக்களென்றும் சொல்லப்படு-
வார்கள் என்கிறார். [5] இதை உங்கள் கண்கள் காணும். அப்பொழுது நீங்கள்: யெகோவா இஸ்ரவேலுடைய எல்லை
தாண்டி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள்.

† *தள்ளிவிட்டேன்* †† *ஏசாவின் சந்ததிகள்*

# மத்தேயு

ஆசிரியர்

இந்தப் புத்தகத்தின் ஆசிரியரான மத்தேயு, இயேசுவைப் பின்பற்றுவதற்காக தனது வரி வசூலிக்கும் பணியைக் கைவிட்டார் (9:9; 13). மாற்குவும் லூக்காவும் தங்களது புத்தகங்களில் இவரை லேவி என்று குறிப்பிடுகின்றனர். இவருடைய பெயரின் அர்த்தம் ஆண்டவருடைய "வெகுமதி" என்பதாகும். பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான மத்தேயு தான், இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் என்று ஆதி சபை பிதாக்கள் பொதுவாக ஒப்புக்கொள்கின்றனர். மத்தேயு, இயேசுவின் ஊழியத்தின் நிகழ்வுகளை கண்ணாரக் கண்ட சாட்சியாவார். மற்ற சுவிசேஷங்களுடன் மத்தேயு சுவிசேஷத்தை ஒப்பீடு செய்யும் ஆய்வானது, கிறிஸ்துவின் அப்போஸ்தல சாட்சியானது பிரிக்கப்படவில்லை என்று நிரூபிக்கிறது.

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி 70 காலகட்டங்களில் எழுதப்பட்டிருக்கலாம். மத்தேயு சுவிசேஷத்தின் யூத தன்மையை கவனிக்கும்போது, இது பாலஸ்தீனம் அல்லது சீரியாவில் எழுதப்பட்டிருக்கலாம். ஆனாலும் இது அந்தியோகியாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்று அநேகர் கருதுகின்றனர்.

யாருக்காக எழுதப்பட்டது

இந்த சுவிசேஷம் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருப்பதால், மத்தேயு, கிரேக்க மொழி பேசும் யூத சமுதாயத்தை சேர்ந்த வாசகர்களை குறிக்கோளாகக் கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது. அநேகக் கூறுகள் யூத வாசகர்களைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதலை மத்தேயு முக்கியத்துவப்படுத்துகிறார்; ஆபிரகாமிலிருந்து இயேசுவின் சந்ததியை வரிசைப்படுத்துதல் (1:1; 17); அவர் யூத மொழிநடையைப் பயன்படுத்துகிறார், எ. கா, "பரலோக ராஜ்யம்", தேவனுடைய பெயரை பயன்படுத்துவதற்கு யூதர்கள் தயக்கம் காட்டுவதை பரலோகம் என்ற வார்த்தை வெளிப்படுத்துகிறது, "தாவீதின் குமாரனாகிய" இயேசுவை மையமாகக் கொண்டிருப்பது (1:1; 9:27; 12:23; 15:22; 20:30; 31; 21:9, 15; 22:41; 45). மத்தேயு யூத சமுதாயத்தை மையமாகக் காட்டுதல்.

எழுதப்பட்ட நோக்கம்

இந்த சுவிசேஷத்தை எழுதும்போது, யூத வாசகர்கள் மேசியாவாக இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே மத்தேயுவின் நோக்கமாக இருக்கிறது. இங்கு கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், தேவனுடைய ராஜ்யத்தை மனிதகுலத்திற்கு கொண்டுவருவதை வலியுறுத்துவதாகும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் ராஜாவாக இயேசுவை வலியுறுத்துகிறார் (மத்தேயு 1:1; 16:16; 20:28).

மையக் கருத்து

இயேசு-யூதர்களின் இராஜா

பொருளடக்கம்

1. இயேசுவின் பிறப்பு — 1:1-2:23
2. இயேசுவின் கலிலேய ஊழியம் — 3:1-18:35
3 இயேசுவின் யூதேயா ஊழியம் — 19:1-20:34
4. யூதேயாவில் கடைசி நாட்கள் — 21:1-27:66
5. இறுதிக்கட்ட நிகழ்வுகள் — 28:1-20

## அத்தியாயம் 1

### இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு

1 ஆபிரகாமின் மகனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு: 2 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்-
றான்; ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவனுடைய சகோதரர்களையும் பெற்றான்;
3 யூதா பாரேசையும் சாராவையும் தாமாரினிடத்தில் பெற்றான்; பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப்

# மாற்கு

## ஆசிரியர்

ஆதி சபைப்பிதாக்கள், இந்த புத்தகத்தை யோவான் மாற்கு எழுதியதாக பொதுவாக ஒத்துக்கொள்கிறார்கள். யோவான் மாற்கு, புதிய ஏற்பாட்டில் பத்து முறை குறிப்பிடப்படுகிறார் (அப்போஸ்தலர் 12:12, 25, 13:5, 13, 15:37, 39; கொலோசெயர் 4:10, 2 தீமோத்தேயு 4:11, பிலேமோன் 24, 1 பேதுரு 5:13). மாற்கு, பர்னபாவின் உறவினர் என்பதை இந்த குறிப்புகள் குறிக்கிறது (கொலோ. 4:10). மாற்குவின் தாயின் பெயர் மரியாள், அவள் செல்வ செழிப்பு உள்ளவளும் எருசலேமில் மதிப்பிற்குரியவளாகவும் இருந்தாள். அவர்களின் வீடு ஆரம்ப கிறிஸ்தவர்கள் கூடிவருகிற ஒரு இடமாக இருந்தது (அப்போஸ்தலர் 12:12). பவுலின் முதல் மிஷனரி பயணத்தில் யோவான் மாற்கு பவுலோடும் பர்னபாவோடும் சேர்ந்தார் (அப்போஸ்தலர் 12:25, 13:5). வேதாகம ஆதாரங்கள் மற்றும் ஆரம்பகால சபைப்பிதாக்களின் குறிப்புக்கள் பேதுரு மற்றும் மாற்கு இடையே நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன (1 பேதுரு 5:13). அவர் பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். பேதுருவின் பிரசங்கம் மற்றும் அவருடைய கண்கண்ட சாட்சிகள் ஆகியன மாற்கு சுவிசேஷத்திற்கு முக்கிய ஆதாரமாக இருந்திருக்கலாம்.

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி 50-60. காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.
மாற்கு நற்செய்தி ரோமில் எழுதப்பட்டிருப்பதாக சபைப்பிதாக்களின் (ஐரெனீயஸ், அலெக்ஸாண்டிரியாவின் கிளெமெண்ட் மற்றும் பிறர்) புத்தகங்கள் உறுதிப்படுத்துகின்றன. பேதுருவின் மரணத்திற்கு (கிபி 67-68) பின்னர் நற்செய்தி எழுதப்பட்டதாக ஆரம்பகால சபை ஆதாரங்கள் கூறுகின்றன.

## யாருக்காக எழுதப்பட்டது

மாற்கு, நற்செய்தியை பொதுவாக புறசாதி மக்களுக்காகவும், குறிப்பாக ரோம வாசகர்களுக்காகவும் எழுதியுள்ளார் என்று சான்றுகள் மற்றும் ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன. இது இயேசுவின் வம்சாவளியை உள்ளடக்கியது அல்ல, காரணம் புறசாதி உலகமானது மிகக் குறைந்த அளவே புரிந்திருந்தது.

## எழுதப்பட்ட நோக்கம்

மாற்கின் வாசகர்கள் குறிப்பாக ரோமானிய கிறிஸ்தவர்கள் கிபி. 67-68 ல் பேரரசர் நீரோ ஆட்சியின் கீழ் கடுமையான துன்புறுத்தல் மத்தியில் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். அத்தகைய சூழ்நிலையில் மாற்கு இத்தகைய கடினமான காலங்களிலிருந்த கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க துன்பகரமான ஊழியராக இயேசுவை சித்தரித்து (ஏசாயா 53) இந்த நற்செய்தியை எழுதினார்.

## மையக் கருத்து

இயேசு பாடு அனுபவிக்கும் ஊழியர்

பொருளடக்கம்

1. வனாந்தரத்தில் ஊழியத்திற்கான இயேசுவின் ஆயத்தம் — 1:1-13
2. கலிலேயாவைச் சுற்றிலும் உள்ளேயும் இயேசுவின் ஊழியம் — 1:14-8:30
3. இயேசுவின் ஊழியம்: துன்பமும் மரணமும் — 8:31-10:52
4. எருசலேமில் இயேசுவின் ஊழியம் — 11:1-13:37
5. சிலுவை பாடுகளின் வர்ணிப்பு — 14:1-15:47
6. இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் தரிசனமும் — 16:1-20

### அத்தியாயம் 1

### யோவான்ஸ்நானகன் வழியை ஆயத்தம்பண்ணுதல்

1 தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியின் ஆரம்பம்.
2 “இதோ, நான் என் தூதுவனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்,

# லூக்கா

ஆசிரியர்

பண்டைய எழுத்தாளர்களின் ஒருமித்த நம்பிக்கை என்னவெனில் எழுத்தாளர் லூக்கா, மருத்துவராக இருந்தார். அவரது எழுத்துக்களிலிருந்து பார்க்கும்போது, அவர் இரண்டாவது தலைமுறை கிறிஸ்தவர் என்று தோன்றுகிறது என்பதாகும். பாரம்பரியமாக அவர் ஒரு நல்ல மனிதராக கருதப்படுகிறார், குறிப்பாக ஒரு நற்செய்தியாளராக இருந்தார், சுவிசேஷத்தையும் அப்போஸ்தலர் புத்தகத்தையும் எழுதி, பவுலுடன் இணைந்து மிஷனரி ஊழியத்தையும் நிறைவேற்றினார் (கொலோ 4:14; 2 தீ. 4:11; பிலிப்பியர். 24).

எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறத்தாழ கிபி 60-80 காலகட்டத்தில் எழுதப்பட்டது.
லூக்கா தனது புத்தகத்தை செசரியா பட்டணத்தில் ஆரம்பித்து ரோமில் முடித்தார். எழுத்தின் முக்கிய இடங்கள் பெத்லகேம், கலிலேயா, யூதேயா மற்றும் எருசலேம் ஆகியவை ஆகும்.

யாருக்காக எழுதப்பட்டது

லூக்காவின் புத்தகம் தெயோப்பிலுவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, அப்பெயரின் அர்த்தம் தேவனை நேசிப்பவர் என்பதாகும். அவர் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தாரா, அல்லது அவர் கிறிஸ்தவராக மாறி வருகிறாரா என்பது தெளிவாக இல்லை. லூக்கா அவரை மிகச் சிறந்தவராக (லூக்கா 1:3) அடையாளப்படுத்துவதன் காரணம் அவர் ஒரு ரோமானிய அதிகாரி என்று குறிப்பிடுகிறார், பல விதமான சான்றுகள் புறஜாதி வாசகர்களைக் குறிக்கின்றன, அவருடைய முக்கிய கவனம் மனிதகுமாரன் மற்றும் தேவனுடைய இராச்சியம் ஆகியவை ஆகும் (லூக்கா 5:24, 19:10, 17:20-21, 13:18).

எழுதப்பட்ட நோக்கம்

இயேசுவின் வாழ்க்கை பற்றிய ஒரு விளக்கம், லூக்கா இயேசுவை மனிதகுமாரனாக முன்வைக்கிறார், அவர் தெயோப்பிலுவுக்கு எழுதியுள்ளார், அதனால் அவர் கற்பிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி பரிபூரணமான புரிந்துணர்வுடன் இருக்கலாம் (லூக் 1:4). இயேசுவைப் பின்பற்றுவோருக்குத் துன்புறுத்துவது அல்லது கெட்டது எதுவுமே இல்லை என்பதைக் காட்டுவதற்கு துன்புறுத்தலின் சமயத்தில் லூக்கா கிறிஸ்தவத்தை பாதுகாப்பதற்காக எழுதுகிறார்.

மையக் கருத்து

இயேசு பூரணமான மனிதர்.

பொருளடக்கம்

1. இயேசுவின் பிறப்பு மற்றும் ஆரம்ப வாழ்க்கை — 1:5-2:52
2. இயேசுவின் ஊழியத்தின் தொடக்கம் — 3:1-4:13
3. இரட்சிப்பின் காரணரான இயேசு — 4:14-9:50
4. இயேசு சிலுவைக்கு சென்ற பாதை — 9:51-19:27
5. எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான பிரவேசம், சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் — 19:28-24:53

அத்தியாயம் 1

முன்னுரை

1 மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாக நம்புகிற காரியங்களை, 2 ஆரம்பமுதல் கண்-
கூடாகப் பார்த்து வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக்குறித்து சரித்திரம்
எழுத அநேகம்பேர் முயற்சித்தனர். 3 ஆகவே, ஆரம்பமுதல் எல்லாவற்றையும் திட்டமாக விசாரித்து அறிந்த நானும்
உமக்கு உபதேசிக்கப்பட்ட காரியங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டும் என்று, 4 அவைகளை சரியாக ஒழுங்குப்ப-
டுத்தி உமக்கு எழுதுவது எனக்கு நல்லதாகத் தோன்றியது.

# யோவான்

### ஆசிரியர்

செபதேயுவின் மகனாகிய யோவான், யோவான் 21:20, 24 ன்படி இந்தச் சுவிசேஷத்திற்கு ஆசிரியர் ஆவார். இது இயேசுவை மிக அதிகமாக நேசித்த சீஷனும், “இயேசுவால் நேசிக்கப்பட்ட சீஷன்” என்று தன்னையே அழைத்துக்கொண்டவனின் படைப்பாக இருக்கிறது. இவரும் இவருடைய சகோதரன் யாக்கோபும் “இடிமுழக்க மக்கள்” என்று அழைக்கப்படுகிறார்கள் (மாற்கு 3:17). இயேசுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிய கண்கண்ட சாட்சியாகவும், சாட்சி கொடுப்பதற்கும் பிரத்தியேகமான பாக்கியம் அவர்களுக்கு இருந்தது.

### எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறத்தாழ கிபி 50-90 காலகட்டங்களில் எழுதப்பட்டது.
யோவானின் நற்செய்தி எபேசுவிலிருந்து எழுதப்பட்டிருக்கலாம், எழுத்தப்பட்ட முக்கிய இடங்கள் யூதேயா நாட்டுப்புறமான சமாரியா, கலிலேயா, பெத்தானியா, எருசலேம் ஆகியவை.

### யாருக்காக எழுதப்பட்டது

யோவானின் நற்செய்தி யூதர்களுக்கு எழுதப்பட்டது. இயேசுவே மேசியா என்று யூதர்களுக்கு நிரூபிக்க இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது. இயேசுவே, கிறிஸ்து என்று அவர்கள் நம்ப வேண்டும் என்பதற்காகவும், அவ்வாறு விசுவாசிப்பவர்களுக்கு அவருடைய நாமத்தில் நித்தியஜீவன் உண்டு என்பதைக் கூறும்படியாகவும் அவர்களுக்கு விவரங்களை வழங்கினார்.

### எழுதப்பட்ட நோக்கம்

யோவான் நற்செய்தியின் நோக்கம், யோவான் 20:31 ல் குறிப்பிடப்பட்டுள்ள “விசுவாசத்தில் கிறிஸ்தவர்களை உறுதிப்படுத்தி பாதுகாக்க வேண்டும்” என்பதாகும். ஆனால் இயேசுவே கிறிஸ்துவாகவும், தேவனுடைய குமாரனாகவும் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், அவரது நாமத்தில் நித்தியஜீவன் உண்டு என்பதை நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. யோவான் வெளிப்படையாக, அனைத்து விஷயங்களையும் வெளிப்படுத்திய, (யோவான் 1.1) இயேசுவே, தேவன் என்று அறிவித்தார் (யோவான் 1.3). அவர் ஒளியாக (யோவான் 1.4, 8.12) மற்றும் ஜீவனாக இருக்கிறார் (யோவான் 1.4, 5.26, 14.6). இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்க யோவான் நற்செய்தி எழுதப்பட்டது.

### மையக் கருத்து

இயேசு-தேவனுடைய மகன்

பொருளடக்கம்

1. இயேசுவே ஜீவாதிபதி — 1:1-18
2. முதல் சீஷனின் அழைப்பு — 1:19-51
3. இயேசுவின் பொது ஊழியம் — 2:1-16:33
4. பிரதான ஆசாரியனின் முறையில் ஜெபித்தல் — 17:1-26
5 கிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் — 18:1-20:10
6. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு செய்த ஊழியம் — 20:11-21:25

## அத்தியாயம் 1

### வார்த்தை மாம்சமானது

1 ஆரம்பத்திலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடம் இருந்தது, அந்த வார்த்தை தேவனாக இருந்தது.
2 அவர் ஆரம்பத்திலே தேவனோடு இருந்தார். 3 எல்லாமும் அவர் மூலமாக உண்டானது; உண்டானது ஒன்றும்
அவர் இல்லாமல் உண்டாகவில்லை. 4 அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனிதனுக்கு ஒளியாக இருந்தது.
5 அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதை மேற்கொள்ளவில்லை. 6 தேவனால் அனுப்பப்பட்ட ஒரு

